# எதிரொலி
## ETHIROLI
ஆஸ்திரேலியா

குரல் 02 அதிர்வு 19 ஜனவரி 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

**SHIPPING SCHEDULE**

Transco CARGO

| CUT OFF | SL ARRIVAL |
| --- | --- |
| JAN 05 | FEB 12 |
| JAN 12* | FEB 20 |
| JAN 19 | FEB 26 |
| FEB 02 | MAR 12 |
| FEB 09* | MAR 19 |
| FEB 16 | MAR 26 |
| FEB 23 | APR 02 |
| MAR 02 | APR 09 |

DID YOU KNOW YOU CAN EXPORT YOUR CAR TO SRI LANKA
CALL TRANSCO TODAY!
*Only Available at Transco Offices
1300 187 267 | TranscoCargo.com.au




**www.AusTamilMatrimony.com.au**

அவுஸ்திரேலியாவிலும் மற்ற நாடுகளிலும் திருமணத்திற்கு தயாராக இருக்கும் தமிழ் மணமக்களை இணைத்து வைக்கும் சேவை நோக்கத்தோடு வெளியிடப்பட்ட ஒரு இணயத்தளமே இதுவாகும்

இந்த இணயத்தளத்தில் பதிவு செய்த மணமக்களின் விபரங்கள் மிகவும் கவனமாக வைத்திருக்கப்பட்டு பொருத்தமான profiles உள்ள மற்ற அங்கத்தவர்களுக்கு மட்டுமே காண்பிக்கபடும். பெற்றோர்கள் முழு நம்பிக்கையோடு இந்த இணையத்தளத்தில் தமது பிள்ளைகளின் விபரங்களை உரிய காலத்தில் பதிவு செய்து பொருத்தமான வாழ்க்கை துணைகளை தேடிக்கொள்ளவும்.

- The profiles in our database are NOT available for public viewing.
- Only registered clients with MATCHING profiles can view other party's details.
- Contact phone and email are provided only after one party expressed interest and other party accepted.
- Photos are NOT required to register.
- Profits will be donated to charities.

MEMBERSHIP - $50 PER YEAR
NO OTHER FEE/COMMISSION AT ANY STAGE

REGISTER NOW!

admin@austamilmatrimony.com.au
+ 61 0415150483 / 61 07-31620036



**Waverley Toyota - You'll LOVE us!**

TOYOTA




**Buy with Confidence**
Proud to be Melbourne's longest serving automotive group

**Finance Available!**
- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals

SPRINGVALE ROAD
WAVERLEY ROAD
NEW & USED

DL11333



All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499
We speak your language

Oh what a feeling!

மெல்பேர்ணிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தைத்திருநாள் வாழ்த்துகள்
SMS
ABN : 87155477944
The Smart Choice for Your Smart Devices...
Smart Mobiles
Mobile Phone & Computer - Repairs & Services
Shop 2, 1-7 Langhorne Street, Dandenong, VIC 3175
0410 800 811
www.smartmobiles.com.au
The Cheapest Place For
LCD
Replacements
மலிவான விலையில் தரமான கைத்தொலைபேசி , கணனி திருத்தவேலைகள்
மற்றும் இதர சேவைகளைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஒரே இடம்
# Mobile Phone Repairing
# Mobile Phone Unlocking
# Selling Unlocked Phones
# Computer & Laptop Repairs
# Mobile Phone Accessories
We Open 7 Days


You're our world
SriLankan Airlines
Chennai
Starting from
AUD 757*
SriLankan Airlines daily connections to Chennai from Melbourne via Colombo
Enjoy the comforts of flying our latest A330-300 aircraft from Melbourne
Book now for 2019
1300 853 081
info@srilankanau.com.au
www.srilankan.com
*Fares are inclusive of taxes & subject to change without prior notice
*Terms and conditions apply




# இலங்கை இனமுரணை அரங்காற்றும் ஆஸ்திரேலிய நாடகத்தில் ஷோபா!

"ஷோபா சக்தி" என்ற புனைபெயரையுடைய அன்ரனிதாசன் ஜேசுதாசன் தமிழ்ப் படைப்புலகத்தில் செலுத்திய தாக்கம் மிகப்பெரியது. கடந்த இருபதாண்டு கால தமிழ் இலக்கியப்பரப்பில் தனது எழுத்துக்களின் வீச்சினால் விசாலமான பரப்புக்களைத்தொட்ட ஷோபா சக்தி, ஈழத்தமிழ் பரப்பிலும் அதற்கு அப்பாலும் தனது பெயரை தனியாக நிலைப்படுத்தியவர். அதனைத் தனது எழுத்துக்களால் நிறுவியவர்.

இலக்கியத்தில் அவர் மேற்கொண்ட முரணியக்கம் பலத்த விமர்சனங்களைச் சந்தித்திருக்கிறது. அந்த சமரசமில்லாத தனதுஎழுத்துப்பயணத்துக்காகப்பலவற்றை இழந்தவர். தனிப்பட்ட தாக்குதல்களையும் சந்தித்தவர். ஆனால், தொடர்ந்தும் தனது படைப்புக்களால் மாத்திரம் பதில்களை வழங்கி, கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொண்டுவந்தவர். தன் மீதான விமர்சனங்களை வாழ்ந்து கடந்தவர்.

ஒரு முன்னாள் போராளியாக - இலக்கிய யாசகராக - எல்லோராலும் அறியப்பட்ட ஷோபா சக்தி, ஒரு தேர்ந்த நடிகர் என்பது அநேகர் அறியாத அவரது ஆற்றல் பரப்பு.

அவரை அண்மையில் சிட்னியில் சந்தித்து பல மணிநேரம் பேசியபோது கிடைத்த விடயங்கள், ஆரம்ப காலம் முதல் அவர் நடிப்பில் கொண்டிருந்த வேட்கை எத்துணை வீரியம் மிக்கது என்பதை நிரூபணம் செய்தது.

ஆனால், அந்த ஆச்சரியத்தைக்காட்டிலும், அவர் இன்று நடிப்புலகத்தில் அடைந்திருக்கும் உச்சம் எத்தகையது என்பது எம்மவர்கள் பலருக்குத் தெரிந்திராத ஒன்று.

பிரஞ்சு மொழித் திரைப்படத்தின் வாயிலாக "கேன்ஸ்" திரைவிழாவரை சென்று ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கும் ஒரு மகா கலைஞனாக உருவெடுத்திருக்கும் ஷோபாசக்தி, தற்போது நடிப்புலகின் ஏனைய பரிணாமங்களின்வாயிலாகவும்முழுவீச்சுடன்தனது பயணத்தை மேற்கொண்டுவருகிறார்.

சர்வதேச அளவில் தொடர்ச்சியான படவாய்ப்புக்கள், தமிழ்க்கதைகளை பிற மொழிகளைப் படமாக்குவதற்கு திரைக்கதையமைத்தல் என்று புத்தகங்களுக்குள் இருந்து திரையரங்களில் அவதாரமெடுத்திருக்கும் ஷோபாசக்தி இன்றைய நாளில் எட்டிப்பிடிக்க முடியாத பிஸியான பட்டாம்பூச்சி.

தற்போது "Counting and Cracking" என்ற நாடகத்தில் நடிப்பதற்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்திருக்கிறார்.

இலங்கையில் தமிழ் - சிங்கள தரப்புக்களுக்கு இடையில் இடம்பெற்ற நீண்டகால இனப்பிணக்கினை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுசிட்னியில்அரங்கேறப்போகும் இந்த நாடகம் மிகப்பெரியதொரு வெளியீடு. சக்திதரன் என்பவரால் சுமார் பத்து வருடங்களாக எழுதி செம்மைப்படுத்தப்பட்டு, நாடக அரங்குக்கு தயாராகியிருக்கும் இந்தக் கதையில் உலகெங்கிலுமிருந்து வந்துள்ள 16 கலைஞர்கள் நாற்பது கதாபத்திரங்களாக நடிக்கவுள்ளார்கள்.

நான்குதலைமுறைகளின்மீதுதாக்கம் செலுத்திய இலங்கை இனப்பிணக்கின் மீது முழுமையானதொரு படைப்புலக பார்வையை முன்வைத்தலும் அதன் ஆழமான செய்தியை இலங்கையர்கள் அல்லாதவர்களுக்கும் எடுத்துச்செல்வதும்தான் "Counting and Cracking" நாடகத்தின் நோக்கம் என்கிறார் ஷோபாசக்தி.

மூன்று மணிநேரம் நடைபெறவுள்ள இந்த நாடகத்தில் நடிப்பதற்கு ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பாலஸ்தீனம், மலேசியாபோன்றவெவ்வேறுபின்னணிகளைக்கொண்ட நடிகர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்திருக்கிறார்கள்.

எதிர்வரும்ஜனவர்மாதம்11ஆம்திகதி முதல்பெப்ரவரி2ஆம்திகதிமுதல்சிட்னியில் நடைபெறவுள்ள இந்த "Counting and Cracking" நாடகம், மார்ச்மாதத்தில் அடிலெய்ட்டிலும் அரங்கேறவுள்ளது. முற்று முழுதாக ஆங்கிலத்தில் அமைந்த இந்த நாடகத்தில் நடிக்கும் ஒவ்வொரு கலைஞரும் ஒன்றுக்கும் மேற்பட்ட பாத்திரங்களை ஏற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். மாபெரும் போரொன்றின் வழியான பயணத்துக்குள் திணிக்கப்பட்ட இனங்களின் ஆன்ம வலியை பிரதிபலிக்கும் உயிர் வடிவங்களாக இந்தக் கலைஞர்கள் மேடையில் தோன்றவுள்ளார்கள்.

ஒரு மாத காலமாகவே இந்த நாடகத்துக்கான ஒத்திகைகள் சிட்னியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் பங்குபற்றுவதற்கு பிரான்ஸிலிருந்து முதன்முறையாக ஆஸ்திரேலியாவுக்கு வந்து சிட்னியில் தங்கியிருக்கும் ஷோபாசக்தி, ஒவ்வொரு நாளும் நாடகத்துக்காகவே தன்னை ஒப்புவித்துக்கொண்டிருக்கிறார். இடையில் கிடைத்துக்கொண்ட ஒரு வாய்ப்பின்போது அவரை அழைத்து வந்து பேச்சுக்கொடுத்தபோது, ஊர் மணம் மாறாத தனது பேச்சோடு எம்மில் ஒட்டிக்கொள்கிறார்.

நடிப்பில் தனது ஆரம்பகாலப் பங்களிப்புக்குறித்து பேசும்போது விடுதலைப்புலிகளால் 1985 காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட "விடுதலைக்காளி" தெருக்கூத்தில் தான் நடித்தது முதலான அனுபவங்களை உவகையோடு பகிர்ந்துகொண்டார்.

சமகால இலக்கிய செல்நெறிகள் குறித்துப்பேசும்போதும் அதன் ஆழ அகலங்கள் குறித்து தனது அளவீடுகளை முன்வைக்கும்போதும் எந்த சமரசமும் இல்லாதவராகப் பேசுகிறார்.

இலக்கியத்தின் நுனிப்புல் மேய்பவர்களாகவும் - சமூக வலைத்தள சலனங்களுக்கு எடுபட்டவர்களாகவும் பயணிப்பவர்கள் படைப்புலகத்தில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்திவிடமுடியாது என்றும் கூறுகிறார். அந்த வகையில், யாழ்ப்பாணத்திலுள்ள சில இளைஞர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக காணப்படுகிறார்கள் என்றும் புலம்பெயர்ந்த மண்ணிலும் ஒரு சிலர் ஆரோக்கியமாக காணப்படுகிறார்கள் என்றும் சொல்கிறார். தீவிர இலக்கிய வாசகர்களாகவும் சிற்றிதழ் செயற்பாட்டாளர்களாவும் செயலூக்கத்துடன் காணப்படும் இளைஞர்களின் வழியாக எதிர்கால இலக்கியம் ஆரோக்கியத்துடன் பயணப்படும் என்ற நம்பிக்கையுள்ளது என்கிறார்.

அறம்சார்ந்தபார்வையில்லாதவர்கள் ஒருபோதும் இலக்கியத்துக்கு உண்மையாக இருக்கமுடியாது. ஆக, நலன் சார்ந்த எழுத்துக்களுக்குள் சரணாகதியடைந்துவிடாது உண்மையை பேசக்கூடிய மனமும் அதனை எழுத்துக்களில் கொண்டுவரக்கூடிய துணிவும் கூடிவரப்பெற்றவர்கள்தான் காலத்தை தாண்டிய இலக்கியத்துக்கு உரித்துடையவர்கள் என்கிறார்.

இலக்கியத்தை முன்வைத்தல் மாத்திரம் முடிந்த முடிவாகிவிடாது. அதன் மீது ஆரோக்கியமான - ஆழமான விவாதங்களை நடத்தவேண்டும். வளம் மிக்க மனிதர்களோடு இணைந்து பேசவேண்டும். தீவிர வாசிப்பு என்பது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கு அனுபவங்களை கேட்டறிதலும் அத்தியாவசியமானது என்கிறார் ஷோபாசக்தி.

ஜனவரிமாதம்சிட்னியில்அரங்கேறப்போகும் நாடகம் நிச்சயம் ஆஸ்திரேலியாவின் ஏனைய மாநிலங்களிலும் அரங்கேறும்வாய்ப்புண்டுஎன்றார். அத்தோடு நின்றுவிடாது, இலங்கை மேடைக்கும் அது சென்று சேரும் என்று அவர் திடமாகநம்புகிறார். இந்தநாடகத்தைஅனைவரும் வந்து பார்க்குமாறும் கோரிக்கையை முன்வைத்தார்.


வாரீர் தமிழோடு
Tamil Heritage Festival
2019, January 27
இணைவீர் உணர்வோடு
முப்பெரும் விழா
ஜனவரி 27 - 2019
திருவள்ளுவர் தினம்
தைப்பொங்கல்
தமிழ் புத்தாண்டு
தொல்காப்பியர்
விழா விவரம்:
பாரமட்டா பூங்கா, நியூ சவுத்வேல்ஸ்.( PARAMATTA PARK, NSW ).
North Melbourne Community Center, 49/3 Buncle St, North Melbourne VIC, 3051.
WOODVILLE North Community Centre, 13th Avenue, Woodville North ,SA,5012.
பொங்கி வளரும் தமிழர் பெருவிழாவிற்கு அனைத்து
மூத்ததமிழ்குடி மக்களையும் அன்புடன் வரவேற்கிறோம்....
நிகழ்ச்சி நிரல்:
9.00 மணி - வணக்கம்
9.10 மணி – தமிழ்தாய் வாழ்த்து
9.20 மணி - வரவேற்புரை
9.30 மணி - பொங்கல் பானை
9.40 மணி – குழந்தைகளுக்கான பேச்சுப்போட்டி
தலைப்பு: 1. தமிழ்மொழியின் சிறப்பு
2. தமிழர் பண்பாட்டின் தனித்துவம்
10.45 மணி - குழந்தைகளுக்கான குறளுடன் பொருள்விச்சுப்போட்டி
அதிகாரங்கள்: 1. அறன் வலியுறுத்தல்
2. அன்புடைமை
3. இனியவை கூறல்
11.15 மணி - கோலப்பேட்டி ( பெண்களுக்கானது )
11.30 மணி - தமிழ் பாரம்பரிய நடனங்கள்
( பறையாட்டம் , சிலம்பாட்டம் )
12.00 மணி - உணவு இடைவேளை
1.00 மணி - உறி உடைத்தல் ( இருபாலருக்கும்)
2.00 மணி - கபாடி போட்டி
3.00 மணி - கிளித்தட்டு, கிராமியபாடல்
4.00 மணி - பரிசு வழங்கல்
5.00 மணி - நன்றியுரை
தமிழர் மரபு வகையில் அனைத்து சொந்தங்களுக்கும் வாழை இலையில் உணவு விருந்து.
tamilar.events@gmail.com
விக்டோரியா வாழ் தமிழர்கள்: North & West ( Victoria ) : 0416220595, 0411708434, 0452227922
South & East ( Victoria ) : 0470189784, 0416403283, 0403510524
தெற்குஆஸ்திரேலியா வாழ் தமிழர்கள்: 0412541955, 0413568252, 0424199338
சிட்னி வாழ் தமிழர்கள்: 0451165477, 0468480877, 0404951991

எதிரொலி
மெல்பேர்ண் ETHIROLI
ஒலி 02 அதிர்வு 18 ஜனவரி 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

# பெருநதியின் கழிமுகம்

எதிரொலியின் 2018 ஆம் ஆண்டு மிகப்பலமான காலப்பகுதியாக நகர்ந்து வாசகர்களோடும் மேலும் இறுக்கமாக பிணைப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் பெருமை கொள்கிறது. ஒருபெருநதியின் கழிமுகத்தில் இன்னொரு தடவை எழுந்து நின்று பெருமையோடு திரும்பிப்பார்க்கும் வகையில் எதிரொலியை வாசகர்களும் விளம்பர நண்பர்களும் செழிப்போடு இரு கரங்களில் ஏந்தி வந்திருக்கிறார்கள்.

2018 ஆம் ஆண்டில் வெளிவந்த 12 வெளியீடுகளும் மிகக்காத்திரமான விடயங்களை தாங்கியவை என்பது வாசகர்களின் கருத்து.

எதிரொலியின் 2018 ஆம் ஆண்டு முயற்சியாக ஜனவரி மாதம் முதல் சிறுகதைப் பகுதியை புதிதாக அறிமுகப்படுத்தியிருந்தோம். ஆஸ்திரேலியாவை கதைக்களமாகக் கொண்டு ஆஸ்திரேலிய எழுத்தாளர்கள் எழுதும் கதைகளை மாத்திரம் பிரசுரிப்பது என்ற இறுக்கமான முடிவோடு மேற்கொள்ளப்பட்ட இந்தப்பயணத்தில் கடந்த 12 மாதங்களில் மிகத்தரமான கதைகள் எதிரொலியில் வெளிவந்திருக்கின்றன.

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பேர்த் மாநிலத்திலிருந்து அகிலன் எழுதிய சிறுதையோடு ஆரம்பித்த எதிரொலி சிறுதைக்களம் ரஞ்சகுமார், முருகபூபதி, ஆசி. கந்தராஜா, கீதா மதிவாணன், கிஷோகர், சொலமன் யோகநாதன், அருண் விஜயராணி, தாமரைச்செல்வி, வினோ ஆகியோர் எழு–திய தரமான 11 கதைகள் – மாவீரர் வாரப்பதிப்பு வெளியான நவம்பர் மாதம் தவிர்ந்த பதிப்புக்களில் – வெளியாகியுள்ளன. இவற்றைத் தொகுத்து நூலுருவாக்கம் செய்துகொள்வது குறித்து எதிரொலி ஆசிரியர் பீடம் யோசனை செய்து வருகிறது. காலமும் களமும் கைகூடுகின்றபோது ஆஸ்திரேலிய மண்ணிலிருந்து தேர்ந்தெடுத்த சிறுகதைகளின் தொகுதியாக அந்தப்புத்தகம் உலகின் பல பாகங்களையும் சென்று சேரும். அதனை சாத்தியப்படுத்தியதில் எதிரொலி பெருமை கொள்ளும்.

இதுபோல, 2019 ஆம் ஆண்டிலும் புதிய முயற்சிகளுடன் வாசகர்களுக்கு திருப்தியான – அதேவேளை பயனுள்ள விடயங்களை – எடுத்து வருவதற்கு எதிரொலி பல திட்டங்களுடன் களம்புகுந்திருக்கிறது. அவற்றை நிறைவேற்றுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைப் பகுப்பாய்வு செய்துகொண்டு எதிரொலி குழுமம் முன்னகரும் என்பதில் இரண்டாவது கேள்விக்கே இடமில்லை.

எதிரொலியின் அசுர பலம் எதுவென்றால், அது எப்போதும் மாறாத வாசகர்களின் அன்பும் அரவணைப்பும்தான். வற்ற வற்ற ஊற்றெடுக்கும் சுனை போல எதிரொலியை வாரி அணைத்து வைத்திருக்கும் உங்களின் பலம்தான் இன்றைக்கும் புலம்பெயர்ந்த நாடொன்றில் ஒற்றைக்குரலான இந்த எதிரொலி ஓங்கி ஒலித்துக்கொண்டிருப்பதற்கு பெருந்துணையாக அமைந்திருக்கிறது.

கடந்த வருடங்களைப்போல வருங்காலத்திலும் அத்தகைய மாறாத – உறுதி குலையாத – ஆதரவை தருவீர்கள் என்ற பெரு நம்பிக்கையுடன் 2019 ஆம் ஆண்டுக்குள் நுழைகிறோம்.

எதிரொலியின் வாசகர்கள், விமர்சகர்கள் விளம்பரதாரர்கள், வர்த்தக நண்பர்கள் எல்லோருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

# பாரதியின் பொங்கல்

● எழில்

பொங்கல் என்றாலே வாயில் இனிக்கிறது. ஆனால், அந்த இனிப்பை வாயில் போட்டுக்கொள்வதுதான் ரொம்பக் கடினம் பாரதிக்கு. போருக்குப் பிறகு, நான்கு ஆண்டுகளாக பொங்கலைத் தவிர்த்து வந்தாள். 'எங்கள் வீட்டில் பொங்கல் கிடையாதா அம்மா?' என்று பிள்ளைகள் கேட்டபோது, அவர்களுக்கு என்ன பதிலைச் சொல்வதென்று தெரியவில்லை. பிள்ளைகளைவாரியணைத்துக் கொண்டு ஒரு கணம் விம்மினாள். அதற்கு மேல் என்ன செய்ய முடியும்? அக்கம் பக்கமெல்லாம் பொங்கலுக்காகக் களைகட்டும் போது தங்கள் வீட்டில் மட்டும் பொங்கல் இல்லையென்றால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? அதனால், இந்த ஆண்டு பொங்கியே ஆகவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாள் பாரதி.

வன்னி - இறுதிப்போரிலே அவளுடைய கணவன் காணாமற் போன பிறகு அவள் பொங்கலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கண-வனைத் தேடிக்கொண்டிருக்கும் போது, அவரைப் பற்றிய எந்தத் தகவலுமே கிடைக்காதபோது, அவர் இல்லாதபோது எப்படிப் பொங்குவது?

ஆனால், இனிக்கிற மாதிரி வாழ்க்கை இல்லா விட்டாலும் இனிப்பைத் தேடும் மனதை விட்டு விட முடியுமா? பிள்ளைகளின் மனம்இனிப்பையேதேடிக்கொண்டிருக்கிறது. இளங்கன்றுகள் எதைத்தான் அறியும்? அவள் கூட இளைய வயதில் இனிப்பை மட்டுமே தேடியவள். முல்லைத்தீவுக்குக் கிழக்கே இருக்கும் குமுழமுனை என்ற சின்னஞ்சிறிய கிராமத்தில் அவளுடைய பொங்கல் நாட்கள். வீடும் சுற்றமும் என இனிப்பாகவே இருந்தன.

அவளுடைய ஊரில் மாரி மழையில் புதிதாகத் துளிர்த்திருக்கும் செடிகள் தையை வரவேற்கிற மாதிரியே செழித்துப் பூத்திருக்கும். வயலில் கதிர்கள் முற்றிச் சரியத் தொடங்கும். பொங்கல் வரப் போகிறது என்றாலே இரண்டு கிழமைக்கு முன்பிருந்தே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேலை நடக்கும். மண்ணில் அடுப்புகளைப் பிடித்துக் காய வைப்பது, மாட்டுப்பட்டியை துப்புரவாக்குவது. எருதுகளுக்கு கழுத்துச் சலங்கைகளைபுதிதாக்கிக்கட்டுவது, சந்தைக்குப்போய்ப் புதுப்பானை, பாத்திரங்கள், பட்டு, பழம், பாக்கு - வெற்றிலை, புதிய உடுப்புகள் (புத்தாடைகள்) வெடிப்பெட்டிகள் (பட்டாசு) எல்லாம் வாங்கி வருவது என்று ஆயிரம் வேலைகள். இது மட்டுமாதோட்டத்தில்கரும்பு, இளநீர், தேங்காய் எல்லாவற்றையும் கொண்டு வருவது இப்படிப் பல.

இதைவிட வீட்டில்எந்தநாளும் தயிர் இருந்தாலும் பொங்கலுக்காக தயிர் போடுவது அம்மாவின் விசேசம். நெய், தேன் வேறு. பொங்கல் என்றால் சும்மாவா? அதிலும் தைப்பொங்கல் என்றால்? தமிழர் திருநாள் அல்லவா! வீடே குதூகலிக்கும். வீடு மட்டுமா, ஊர், தெரு, சந்தை எல்லாம்தான்.

எல்லா வீடுகளும் அந்த நாட்களில் குதூகலித்திருந்தன. பொங்கற் பானையும் கரும்பும் தேனும் நெய்யும் நிறைந்த முற்றங்களே எங்குமிருந்தன. பட்டாசுகள்வெடிக்கும் சத்தமே ஊரில் நிறைந்திருந்தது. ஆட்டமும் பாட்டமும் விருந்தும் கொண்டாட்டமும் என்று நாளே இனித்தது. தைப்பொங்கல் முடிந்தால் மறுநாள் பட்டிப் பொங்கல். உழவுக்கு, உழவர்களுக்கு துணையாக இருக்கும் மாடுகள், பாலையும் எருவையும் தரும் பசுக்கள் எல்லாவற்றுக்கும்மரியாதைசெலுத்தும் பொங்கல். ஊர்களே அலங்காரத் தோரணத்தின்கீழ்தான்இருந்தன.

எல்லாம் யுத்தம் வராதவரை-தான். *1983* இனவன்முறையோடு நாடு தலைகீழாயிற்று. அதற்குப் பிறகு பட்டாசுச் சத்தத்திற்குப் பதிலாக துப்பாக்கிச் சத்தங்களே கேட்டன. ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் புதல்வர்களும் புதல்விகளும் 'சொல்லாமற் போனார்கள். 'பிள்ளைகள் இல்லாத வீடுகளில் பொங்கல் எதற்கு? கொண்டாட்டம்எதற்கு? என்றாயிற்று நிலைமை. மெல்ல மெல்ல வீடுகள் துயரில் உறைய, ஊர்களும்இருளில்உறைந்தன. யுத்தம் வளர்ந்து கொண்டிருந்தது. முட்காடாக அது வளர வளர, ஊர்களைவிட்டுப்பெயர்ந்த மக்கள் மரநிழல்களிலும் பள்ளிகளிலும் அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்தனர். முற்றத்தை இழந்த பின் எப்படிப் பொங்குவது? எங்கே பொங்குவது?

*2002* இல் அப்படித்தான்ரணில்-பிரபாகரன் உடன்படிக்கையை அடுத்துவந்த போர்நிறுத்தக்காலத்தில் ஒரு பொங்கல் நடந்தது. அப்பொழுது புலிகளில் பலவிதமான போக்கை உடையவர்கள் துலக்கமடையத் தொடங்கினார்கள். ஒரு சாரார் தமிழ் அடையாளத்தைப் பிரதிபலிக்கும்திருநாள் - தமிழரின் திருநாள் - என்பது தைத்திருநாளே என்று தைப் பொங்கல் நாளைக் கொண்டாடினர். இதற்காக புதுக் குடியிருப்பில் சிறப்பாக அமைக்கப் பட்டதொரு முற்றத்தில் பொங்கல் நடந்தது. இது வழமையான பொங்கல் அல்ல. தமிழர்களின் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் புதுப்பிக்க வேண்டும் என்ற பிரகடனத்தோடு செய்யப் பட்ட இறைச்சிப் பொங்கல். ஆதித் தமிழர்கள் இறைச்சியோடுதான் பொங்கினார்களாம். அதற்குப்பிறகு ஆரியர்கள் வந்து இறைச்சியை விலக்கினார்களாம் என்று பொங்கலுக்கு ஆதரவாகப் பட்டிமன்றமும் நடந்தது. போதாக்குறைக்குத் தமிழர்களின் இசை என பறையும் உடுக்கும் முழங்கின.

புலிகளின் தளபதிகளில் சில-ரும் பொறுப்பாளர்களில் சிலரும் இந்தப் பொங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். பொங்கலை அடுத்து அதைப் பற்றிய ஒரு விளக்க அரங்கும் சில கலைநிகழ்ச்சிகளும் நடந்தன. பொங்கல் முடிய, இந்த மாதிரிப் பொங்கல் செய்வதை அனுமதிக்கலாமா? இது சரியான-தா? என்ற வாதப்பிரதிவாதங்கள் கிளம்பத்தொடங்கின. பொங்கல் பானையில்இப்படி இறைச்சியைப் போட்டுக்கொள்ளலாமா? இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அபிப்பிராயங்கள் அன்றே இன்னொரு பக்கத்தில் எழுந்தன.

பொங்கல் விழா நடந்தது பகலில். இரவு, இந்தப் பொங்கலைப் பற்றி பிரபாகரன் விசாரணைக்கு உத்தரவிட்டார். பொங்கல் விழாவில் கலந்து கொண்டவர்கள் தங்களின் தலைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்ன செய்யலாம் என்று தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். எதிர்பார்த்தமாதிரி விசாரணைகள் கடுமையாக நடக்கவில்லை. இந்தப் பொங்கலில் தனக்குத் திருப்தியில்லை என்ற செய்தியை வெளியே தெரியப்படுத்தி விவாதத்தை முடித்து வைத்தார் பிரபாகரன். 'போராட்டம் வென்ற பின்னர் நாங்கள் வைத்ததே சட்டம். நாங்கள் தீர்மானிப்பதே நடைமுறை. அதற்குள் இப்படிப் பகிரங்கமாக அவசரப்பட்டு மக்களைக் குழப்பிவிடாதீர்கள்' என்று பொங்கலைச் செய்தவர்களையும் சமாதானப் படுத்தினார் பிரபாகரன். அந்தப் பொங்கல் அதோடு முடிந்தது.

இறுதிப்போர் மூண்டபோது நாங்கள் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து தருமபுரத்திலிருந்தோம். அகதிகளால் நிறைந்திருந்தது தருமபுரம். *2009 ஜனவரி 13.* மறு நாள் பொங்கல். அந்த நினைவே யாருக்கும்இல்லை. பெரும்பாலானவர்கள் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தனர். வேறு கதியின்றி வயல் நிலப்பகுதிகளில்குடிசைகளை அமைத்திருந்தவர்களை மாரி மழையின் வெள்ளம் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த நிலையில்தான் அன்று மதியம் தருமபுரத்தை நோக்கி வந்தன எறிகணைகள். வந்த நான்கு எறிகணைகளில் மூன்றும் சனங்களின் குடியிருப்பில் வீழ எங்களின் குடிசைக்கு அண்மையாக ஆறு பேர் சிதறி மாண்டனர். *2009* பொங்கல் யாருக்குமே அமையவில்லை.

போர் முடிந்த பிறகும் எல்லோருக்கும் யுத்தத்தின் வடுக்கள் எளிதில் ஆறிவிடுவதில்லையல்லவா! ஆனாலும் காலம் எந்தக் காயத்தையும் ஆற்றி விடும் பெருமருத்துவனாயிற்றே. இனிக்கிற மாதிரி வாழ்க்கை இல்லாது விட்டாலும் இனிப்பைத் தேடும் மனம் பொங்கல் பானையை முற்றத்தில் வைக்கத் தூண்டுகிறது. அதுதானே இயல்பும் யதார்த்தமும்.

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் கொண்டாட்டங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. சந்தைகளும் தெருக்களும் வீடுகளும் களைகட்டுகின்றன. பட்டாசுகளை வெடிக்க வைக்கும் பிள்ளைகளின் முகத்தில் தெரிவது, தன்னுடைய இனிப்பான காலமே என்று தெரி-கிறது பாரதிக்கு.

இதுவரையும் பொங்காமல் விட்டது கணவருக்காக. இனிப் பொங்குவது பிள்ளைகளுக்காக. இது பிள்ளைகளின் உலகம். நாளைய நாட்கள் அவர்களுடையவை, அவர்களுக்கானவையல்லவா! ■


SATISFACTION 100% GUARANTEED
Logesh Pty Ltd
Home Improvement & Cleaning
0449 722 392
Email - Loges.pty.ltd@gmail.com
• Landscaping
• Decking
• Rubbish Removal
• House Cleaning
• Garden Maintenance
• Painting
• House Renovation
• Kitchen Cabinet
• Builders Cleaning
• Timber Flooring
• Carpet Cleaning
Get Your Free Quote Now !


கருணாகரன்

# "கவிஞர் புதுக்காசி"

வெள்ளத்தில் மூழ்கி முக்குளித்துக்கொண்டிருந்த கிளிநொச்சியில், இனி என்ன நடக்கப்போகுதோ என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, "என்னண்ணை யோசிக்கிறீங்கள்? என்னை ஆரெண்டு தெரியுதா? எப்பிடி இருக்கிறியள்?" என்று கேட்டுக்கொண்டு வந்தான் அவன்.

யாராயிருக்கும்? வெள்ளத்தில் மூழ்குவோரை மீட்கும் அணியைச் சேர்ந்த ஆளா?

சட்டென்று அவனை அடையாளம் காண முடியவில்லை.

ஆனால் பழகிய முகம்.

கேட்ட குரல்.

தெரிந்த சிரிப்பு.

என்றாலும் கலங்கிக் கொண்டேயிருந்தது நினைவுப்படம்.

நான் நினைவுகளைத் தெளிவாக்குவதற்கிடையில் சிரித்துக் கொண்டே கைகளைப் பிடித்தான்.

அந்தக் கைப்பிடியில், அந்த நெருக்கத்தில் சட்டென ஒளிகொண்டு வெளித்தது ஞாபகச் சிற்பம்.

"அடேய் புதுக்காசி!" என்று என்னை அறியாமலே கூவினேன்.

சற்றுப் பெருத்திருக்கிறானா வாடியிருக்கிறானா என்று தெரியவில்லை. உடலிலும் முகத்திலும் வயதுக்கு மீறிய முதுமை ஏறியிருந்தது. கண்களில் முந்திய ஒளியில்லை. ஆனாலும் வழமையைப்போலக் கள்ளமில்லாத அப்பாவித்தனத்தோடு எதையோ கேட்பதைப்போலத் தவித்துக் கொண்டிருந்தன அவை.

யுத்தத்துக்குப் பிறகு ஏறக்குறையப் பத்து வருசமாக அவனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். யாரிடம் கேட்டாலும் அவனைப் பற்றிய தகவலைத் தெரியாதென்றே கையை விரித்தார்கள்.

அவர்களிலும் தவறில்லை. சண்டை முடிந்து தடுப்பிலிருந்து வந்தவர்களுக்கு அடுத்தது என்ன? இனி என்ன செய்வது? என்று தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய தெளிவே இல்லாமலிருக்கும்போது மற்றவர்களைப் பற்றி எப்படிச் சிந்திப்பார்கள்?

இதைவிட முன்னரைப்போல யாரிடமும் யாரைப் பற்றியும் கேட்க முடியாது. பழகவும் முடியாது. அப்படி யாரைப்பற்றியாவது கேட்கும்போது நமது கெட்ட காலத்துக்குச் சம்மந்தப்பட்டவர் ஏதாவது காரணங்களால் படையினரால் கைது செய்யப்பட்டாலோ விசாரணை செய்யப்பட்டாலோ அது வேறு பிரச்சினையாகி விடும்.

எதற்காக வீண்சோலி என்று நான்கூடப் புதுக்காசியைப் பற்றி எல்லோரிடத்திலும் கேட்டதில்லை.

இப்படித் தேடவும் முடியாமல் தேடாமல் விடவும் முடியாமலிருக்கும் போது திடீரென்று மாயாவியைப் போல வெள்ளத்துக்குள் வந்து சிரித்துக்கொண்டு அதிசயப்பிறவியாக நின்றால் திகைப்பும் சந்தோசமும் வராமல் வேறு என்னதான் வரும்?

போராட்டத்தில் - போரில் தப்பிப்பிழைத்திருக்கிறான் புதுக்காசி.

இறுதிப்போரில் புலிகளின் புகழ்பெற்ற தளபதிகளெல்லாம் சத்தம் சலாரில்லாமல் செத்து மடிந்து கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் புதுக்காசியினால் என்னதான் செய்திருக்க முடியும்?

ஏதோ ஒரு பலமான விதிரேகை அவனைக் காப்பாற்றிவிட்டது. அல்லது நல்லதொரு அதிர்ஸ்ட தேவதை அவனைக் காப்பாற்றியிருக்கிறாள். அவனை மட்டுமல்ல, அவனைப்போலப் பலர் அப்படி அதிசயம், ஆச்சரியமாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அரசியல் விதியோ அல்லது போர்க்கள யதார்த்தமோ என்னவோ தெரியாது பானு, ஜெயம், பொட்டம்மான், கடாபி, விதுஸா, துர்க்கா, மணிவண்ணன், சூசை எனப் பெரும்பெரும் தளபதிகளெல்லாம் தப்ப முடியாமல் சாவைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கிறது. ஆனால், சாதாரண போராளிகள் தப்பியிருக்கிறார்கள்.

அப்படித் தப்பிய புதுக்காசி 2009 மே மாதம் யுத்தம் முடிந்த கையோடு படையினரிடம் கைதாகி இரண்டு ஆண்டுகள் புனர்வாழ்வு(?) முகாமிலிருந்திருக்கிறான். தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் மூன்று ஆண்டுகள் வீட்டிலேயே, வெளியே வெளிக்கிடாமல் இருந்ததாகச் சொன்னான்.

இப்பிடியிருந்தவனை யாரால்தான் கண்டிருக்க முடியும்?

இதை விட அவனைத் தேடுவதற்கும் வலுவான உறவென்று யாரும் இருக்கவில்லை. அம்மாவும் தம்பியும் மட்டுமே உறவு. தம்பி திருமணம் முடித்து வேறாக இருக்கிறான். வயதான அம்மாதான் புதுக்காசியுடன்.

தடுப்பிலிருந்து வந்த பிறகு என்ன செய்வது? என்று யோசித்திருக்கிறான் புதுக்காசி. IOM என்ற தொண்டு அமைப்புக் கொடுத்த சிறிய உதவியை வைத்துக் கொண்டு அம்மாவுக்கும் தனக்குமான செலவுக்கென கோழி வளர்ப்பு என்று ஒரு சிறிய தொழில் செய்தான்.

இரண்டு வருசத்துக்கு முன்பு வந்த வெள்ளம் அதை அடித்துக்கொண்டு போனது.

அதற்குப் பிறகு கையில் காசில்லை. செய்வதற்குத் தொழிலில்லை. சில நாட்கள் மேசன் வேலைக்கு உதவியாளாகப் போயிருக்கிறான். சண்டைக்களத்தில் காயப்பட்ட காலும் கையும் அதற்குத் தோதுப்படவில்லை. சில நாட்கள் கடையொன்றில் உதவியாளராக வேலை பார்த்தான். ஒருநாள் ரீ.ஐ.டியினர் வந்து கடையில் வைத்தே அவனை விசாரித்ததோடு அந்த வேலையும் போனது.

கடையில் இதெல்லாம் தேவையில்லாத பிரச்சினைகளைத்தான் கொண்டு வரும் என்று ஐநூறு ரூபா காசைக் கூடக் கொடுத்து ஆளைக் காலி செய்தார் முதலாளி. இதற்கு மேல் அவர்தான் என்ன செய்வார் பாவம்.

போராளிகளாக இருந்தவர்கள் இலகு வட்டியில் கடன் பெறலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கான விதிமுறைகள், உறுதிப்படுத்தல் கடிதங்கள், நிபந்தனைகள் என்று ஏராளம் படிகளில் ஏற வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் அவற்றில் ஏறிப்பார்த்தான். அவர்கள் கொடுத்த சிறு கடனில் மீளவும் ஒரு தொழிலை ஆரம்பிப்பது என்பது இலங்கை அரசிடம் சமஸ்டியைப் பெறுவதற்குச் சமனாக இருந்தது.

வேறு என்ன செய்யலாம் என்றால், பதினேழு வயதில் பள்ளிக்கூடத்திலிருந்தே இயக்கத்தில் சேர்ந்தவனுக்கு துப்பாக்கியைச் சிறப்பாக இயக்கத் தெரியும். குறிபார்த்தால் அச்சுப் பிசகாமல் (அருச்சுனனைப்போல இலக்குத் தவறாமல்) சுடத்தெரியும். படையை வேவு பார்க்க முடியும். இயக்கம் சொல்கிறபடி போராட்டத்துக்கான அரசியல் பணிகளைச் செய்யத் தெரியும். அந்த நாட்களில் பல சண்டைக்களங்களில் வீரத்தையும் வித்தைகளையும் காட்டித் தளபதிகளாலும் தலைவராலும் பாராட்டப்பட்ட பேர்வழி. ஒரு சண்டையில் ஒரு கால்கூட பலமாக உடைந்திருந்தது. அதனால் இப்போதும்கூட மெல்லிய கெந்தலாகத்தான் நடக்கிறான்.

இப்படிச் சிறப்புத் தகுதியெல்லாம் இருந்தாலும் இதையெல்லாம் வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? இதற்கெல்லாம் இன்று மதிப்பென்ன? இவற்றையெல்லாம் இப்பொழுது செய்ய முடியுமா?

இதனால் தனக்கு வெளியே வெளிக்கிட்டுத்திரிவதற்கே மனசு வரவில்லை என்றான் புதுக்காசி.

ஒருகட்டத்தில் பேசாமல் எங்காவது தூரந்தொலைவுக்கு நாட்டை விட்டே போய் விடுவோமா என்று கூட யோசித்திருக்கிறான். ஆனால் அதற்கும் காசு வேணுமே!

(09ஆம் பக்கம் பார்க்க

# "கவிஞர் புதுக்காசி"

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாரிடமாவது கடன்பட்டு அரபு நாடுகளுக்கு (மத்திய கிழக்குக்கு) போய் விடலாம் என்று முடிவெடுத்தால் அதற்கும் தொழில் அனுபவம், தொழில் தகமை என்று கேட்டிருக்கிறார்கள்.

அவர்களிடம் தவறில்லை. காசு கொடுப்பவர்கள் அல்லவா, அதற்கான பயனை எதிர் பார்க்கத்தான் செய்வார்கள்.

புதுக்காசியிடமுள்ள தொழில் தகமை என்ன?

துப்பாக்கியால் பிசகாமல் குறிபார்த்துச் சுடத்தெரியும். எந்தப் படைமுகாமுக்குள்ளும் புகுந்து வேவு பார்க்க முடியும்... களைப்போ சோர்வோ இல்லாமல் இரவு பகலாக இயக்க வேலைகளைச் செய்யத் தெரியும்...

இதெல்லாம் இப்பொழுது யாருக்குத் தான் வேணும்? இது அங்கே எதற்கு?

இவற்றை விட இன்னொரு தகுதியும் அவனுக்கிருந்தது. அதுதான் இயக்கத்துக்காகப் போராட்டத்துக்காகப் பாடல்களை எழுதுவது, கவிதைகளை யாப்பது.

இது கூட அங்கே உதவாது. அங்கு மட்டுமல்ல இங்கும், இந்தப் போராட்டம் நடந்த மண்ணிலும் உதவாது.

புதுக்காசி எனக்கு அறிமுகமானதே அவனுடைய கவிதைகளின் வழியாகத் தான்.

அப்பொழுது நான் இலக்கிய இதழொன்றில் வேலை செய்து கொண்டிருந்தேன். தினமும் அல்லது வாரத்துக்கு ஐந்தோ ஆறு கவிதைகள் தபாலில் எனக்கு வரும். சிலவேளை ஒரு பயிற்சிப் புத்தகத்தில் ஐம்பதோ அறுபதோ கவிதைகள் என்று எழுதி யாராவது போராளிகளிடம் கொடுத்து அனுப்பியிருப்பான். எழுதியவரை எனக்கு அறிமுகமில்லை. பெயர் மட்டும் "புதுக் காசி" என்றிருந்தது. புதுமைப்பித்தன், புதுமைலோலன், புதுயுகன் போல இதுவும் ஒரு புதுமை விரும்பியின் பெயராக் கும் என்று விட்டுவிட்டேன்.

இலக்கியப் பத்திரிகைகளில் வேலை செய்கின்றவர்களுக்குக் கிடைக்கின்ற கொடை இது.

"என்ன விளையாட்டா காட்டுகிறாய்?" என்ற மாதிரி ஒருநாள் ஆளே நேரில் வந்து முன்னே நின்றான்.

அன்றைக்கும் இதே கேள்விகள்தான். "எப்பிடி இருக்கிறியள் அண்ணை? என்ன யோசிக்கிறீங்கள்? என்னை ஆரெண்டு தெரியுதா?"

வந்திருக்கிறது சோதனை என்று புரிந்தது.

பேசிக்கொண்டிருக்கும்போது அவனுடைய பெயர் என்ன என்று கேட்டேன்.

போராளிகளுக்கு இயக்கப் பெயர் என்று ஒரு பெயர் இருப்பதுண்டு. அதை விட பெற்றோர் சூட்டிய பெயர், செல்லப்பெயர் என்று வேறு பெயர்களும் இருக்கும். இந்த மாதிரிக் கவிதை, கலை என்று வந்து விட்டால் தாங்களாகவே தங்களுக்கு வைத்துக்கொள்ளும் பெயரும் தனியாக வந்து சேரும்.

இதில் "புதுக்காசி" எந்த வகையானது என்று தெரியவில்லை.

"அது எனக்கு நானே வைத்துக்கொண்ட பெயரண்ணை. புதுவை அண்ணையையும் காசி அண்ணையையும் எனக்குப் பிடிக்கும். ரண்டு பேருந்தான் என்ரை ஆதர்சக் கவிஞர்கள். அதால, புதுவை இரத்தின துரையிடமிருந்து "புது" எண்டதை எடுத்தன். காசி ஆனந்தனிடமிருந்து "காசி" யை எடுத்தன். ரண்டையும் சேர்த்துப் "புதுக்காசி" எண்டு ஆக்கினேன்" என்றான்.

நான் புருவங்களை உயர்த்தினேன்.

போர்க்களத்தில் மட்டுமல்ல, புலி, கவிதைக்களத்திலும் கலக்கத்தான் போகிறது போல என்று தோன்றியது.

பிறகு சண்டைக்களங்களில் ஓய்வு கிடைக்கும்போது அல்லது களத்திலிருந்து பின்தளத்துக்கு வரும்போது இன்னும் ஒரு தொகுதிக் கவிதைகளோடு என்னிடம் வருவான். பாடல்கள் வேறாக இரண்டு மூன்று புத்தகங்களில் இருக்கும். அவ்வளவு கவிதைகளையும் தனிப்புத்தகங்களாகத் தான் போட முடியும்.

"அடேயப்பா, எதிரியோட நீ பாட்டாலும் கவிதையாலும்தான் சண்டை பிடிக்கிறாயா?" என்று ஒருநாள் கேட்டேன். "இதே கேள்வியை ஏற்கனவே தன்னோடு கூட நிற்கும் போராளிகள் கேட்டுவிட்டார்கள்" என்றான்.

புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் ஆகியோரிடமிருந்து பெயரைக் கடன் வாங்கியிருந்தாலும் அவர்களிடமிருந்து புதுக்காசியினால் கவிதைகளை வாங்க முடியவில்லை. அவனாலும் கவிதை-களை உருவாக்க முடியவில்லை. ஆனால், கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தை மட்டும் வைத்திருந்தான்.

அதைவைத்துக்கொண்டு இப்பொழுது என்னதான் செய்ய முடியும்?

அவன் கவிதை எழுதினால்கூட அதை வெளியிடுவதற்கு என்னாலும் முடியாது. என்னிடம் இலக்கிய இதழும் இல்லை.

எல்லோரையும் எல்லாவற்றையும் மூடி நிற்கிறது வெள்ளம். இந்த வெள்ளம் இலகுவில் வடிந்து விடக்கூடிய வெள்ளமல்ல.

புதுக்காசியின் பாடல் ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது..... "................"



# பத்தாவது மாடியில் பசியெடுத்த காலன்!

● தெய்வீகன்

"ஆபத்துக்கு தஞ்சம் கோரி படகேறி ஓடி வந்த சனத்தை எப்பிடியெல்லாம் போட்டு ஆட்டிப்படைத்த அரசாங்கத்துக்கு முண்டு குடுத்துக்கொண்டு நிக்கிற சனத்துக்கு உள்நாட்டிலேயே கடவுள் காட்டிப்போட்டார் பார்த்தீரே"

இவ்வாறு அண்மையில் சிட்னியில் சந்தித்த பெரியவர் ஒருவர் சாப்பாட்டுக்கடை என்று கூட பாராமல் பெரிய சத்தத்தில் என்னோடு தனவினார்.

எங்கே, எப்பிடி, கடவுளா, ஆபத்தா என்று - கமல்ஹாசன் போல - புரியாமல் பேசுகின்ற அந்தப் பெரியவரையும் அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த புரியாணி கோப்பையையும் மாறி மாறிப் பார்த்தேன். அதில் ஏதாவது சீதோஷ்ணமடைந்து என்னோடு சீண்டுகிறாரா என்று பரிதாபமாக உற்றுநோக்கினேன்.

அவர் உடனே புரியாணித்தட்டையும் தூக்கிக்கொண்டு எனக்கு அருகில் வந்தார்.

இப்போது கடவுள் என்னையும் சோதிக்கப்போவது உறுதியாகிவிட்டது.

"தம்பி கேள்விப்பட்டனீரே, சிட்னியில் ஒலிம்பிக் பார்க்கில் நடந்த சம்பவத்தை..."

மிகுதி எனக்குப் புரிந்துவிட்டது. இப்போது அவரது பூடகமான பேச்சு வலு தெளிவாகவே எனக்கு விளங்கிவிட்டது.

சிட்னி "ஒலிம்பிக் பார்க்" பகுதியில் வானுயரப் பிரம்மாண்டமாக எழுந்து நிற்கும் "ஒப்பல் டவர்" எனப்படும் 34 அடுக்குகளைக் கொண்ட கட்டடம் கடந்த கிறஸ்மஸ் தினத்துக்கு முதல்நாளன்று சிட்னி நகரின் வயிற்றிலேயே புளி கரைத்துவிட்டது.

மதியம் தாண்டி 2.45 மணியளவில் அந்தக் கட்டத்திலிருந்து எழுந்த பாரிய சத்தமொன்று அங்கு குடியிருந்த சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட வீட்டுக்காரர்களுக்கு குண்டு விழுந்தது போல வியர்த்துக்கொட்டப்பண்ணிவிட்டது. உடனடியாக கட்டடத்தின் பாதுகாவலர்கள் சத்தம் எழுந்த திசையை கண்டுபிடித்து ஓடிச் சென்று பார்த்தால், பத்தாவது மாடியிலிருந்த தொடுப்புச்சுவரொன்று சில மில்லி மீற்றர்கள் அசைந்திருந்தது.

எப்படியிருந்திருக்கும்?

34 அடுக்குகளைக்கொண்டு இமாலய கட்டடம் ஒன்றில் 10 மாடியில் சிறு விலகல் ஏற்பட்டிருக்கிறது என்றால், அடுத்து என்ன இடம்பெறப்போகிறது என்பதை உய்த்தறிவதற்கு விசாரணை கமிஷனா அமைக்கவேண்டும்?

வீல் என்று கத்திக்கொண்டு ஓடியிருக்கிறார்கள்.

கண்டவர்கள், கேட்டவர்களுக்கு சொல்ல, கேட்டவர்கள், கேட்காதவர்களுக்கும் ஓடிப் போய்ச் சொல்ல, கட்டத்திலிருந்த அத்தனை பேரும் அல்லோல கல்லோலப்பட்டு, லிப்ட்டுக்கள் பாய்ந்து வெளியே ஓடிவந்திருக்கிறார்கள்.

பொலிஸூக்குத் தகவல் பறந்தவுடன் -

அவர்களும் தம்பாட்டுக்கு சைரனடித்துக் கொண்டு ஓடிவர, அவசர சேவைப்பிரிவினர், தீயணைப்புப்படையினர் என்று சிட்னியின் அத்தனை அரசபடையினரும் "ஒலிம்பிக் பார்க்" - பிரதேசத்தை நோக்கிப் படையெடுத்தனர். "ஒலிம்பிக் பார்க்" ரயில் நிலையத்துக்குரிய ரயில் சேவைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட்டு, அப்பிரதேசத்திலிருந்த சுமார் மூவாயிரம் பொதுமக்கள் அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பத்தாம் மாடியில் கேட்ட சத்தம், மொத்த கட்டடமும் இடிந்து விழுவதற்கு ஊதப்பட்ட சங்கு என்று அவர்கள் அனைவரும் திடமாக நம்பினார்கள்.

மறுபுறத்தில, ஊடகங்கள்வேறு தங்கள் பங்குக்கு அலறத்தொடங்கின. விசேட செய்தி - பிரத்தியேக செய்தி - பிந்திய செய்தி என்று ஆஸ்திரேலியாவின் சகல ஊடகங்களின் ஹெலிக்கொப்டர்களும் கமராக்களோடு ஒபல் அடுக்கு மாடித்தொடரைச் சுற்றிப்பறக்கத்தொடங்கின. ஆஸ்திரேலியா முழுவதும் செய்தி பரவ, கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுவதற்கு விடுமுறைக்களியாட்டத்தோடு சொக்கிப்போயிருந்த எல்லோரும் மிரண்டுபோனார்கள்.

ஆனால், சிறிது நேரத்திலேயே அனைத்து சோதனைகளையும் செய்துமுடித்த அவசர சேவைப்பிரிவினர், கட்டடத்தில் எந்தப்பிரச்சினையும் உடனடியாக இல்லை என்று கூறிவிட்டு போய்விட்டார்கள்.

ஆனாலும், கட்டட முகாமையாளர்கள் தங்களது தரப்பு வல்லுனர்களை அழைத்துச்சென்று ஆழமான சோதனைகள், விசாரணைகள் என்று அனைத்தையும் நடத்தியதில் கட்டடத்திலுள்ள 342 குடியிருப்புக்களில் 51 குடியிருப்புக்களுக்கு இப்போது யாரும் போகவேண்டாம் என்று ஆள்கூறு கீறி அறிவுரை வழங்கினார்கள்.

அங்கிருந்து வெளியேறவேண்டியவர்கள் அனைவருக்கும் மாற்றுத்தங்குமிட வசதிகளை அமைத்துக்கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதாக கூறப்பட்டது.

பெரிதாக ஏதோ நடைபெறப்போகிறது என்று எதிர்பார்த்த ஊடகங்கள், கடைசியில் அந்த 51 வீட்டுக்காரர்களிடமும் ஓடிப் போய் செய்தியெடுத்து வெறும்வாயை சப்பிக்கொண்டிருந்தன.

இவ்வாறான ஒரு நிலையில் - சில நாட்கள் கழித்து - 24 மணிநேரத்தில் கட்டத்தில் உள்ள அனைவரையும் வெளியேறக்கோரிய கட்டட நிர்வாகம், அடுத்த 10 நாட்களுக்கு கட்டடம் தழுவிய முழுமையான சோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அறிவித்தார்கள்.

சேதாரம் எதுவுமில்லை என்று பெருமூச்சோடு வீட்டுக்குள் போனவர்கள் அனைவரும் செருப்பைக் கழற்றும் முன்னரே விடுக்கப்பட்ட இந்த அடுத்த அறிவிப்பினால், மீண்டும் பெட்டி படுக்கைகளை தூக்கிக் கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். கட்டட நிர்வாகம் விரல் காட்டிய இடத்துக்கு ஓடினார்கள்.

இப்போது அவர்கள் அனைவருக்குமே கடுப்பேறிவிட்டது. ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொட்டி, சிட்னியின் செல்வந்தக் குடியிருப்பொன்றில் ஏறியிருப்பதற்கு கனவுகண்ட தங்களை ஒரே ஒரு "டமார்" சத்தம் இப்படி பண்ணிவிட்டதே என்று கொடுங்கோபம் கொண்டார்கள். வழக்கம்போல கட்டடம் அமைத்தவர்களை நோக்கி "அர்ச்சனை" செய்யத்தொடங்கினார்கள்.

விவகாரம் பாரதூரமானது என்பதனால், செய்தி வெளிவந்த அடுத்தநாளே நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் பாய்ந்தடித்து வந்து என்ன என்று கேட்டது? ஏனெனில், இந்த மொத்தக் கட்டத்தை கட்டுவதற்கு அனுமதி கொடுத்தது முதல், கட்டத்தின் பாதுகாப்பு தொடர்பில் சோதனைகள் செய்து மக்கள் குடியிருப்புக்கான அபிவிருத்தி அனுமதி வழங்கியது வரை அனைத்துமே நியூசவுத் வேல்ஸ் மாநில அரசாங்கத்தின் கீழ் இயங்கும் கவுன்ஸில்தான். ஆக, தற்போது இடம்பெற்றிருக்கும் இந்தப்பிரச்சினையில் தங்களது தலை உருளப்போகிறது என்பது அவர்களுக்கு தெள்ளத்தெளிவாகவே தெரியும்.

கட்டடத்தை கட்டுவதற்கான ஒப்பந்த அனுமதியை வென்ற நிறுவனத்தினர் லேசுப்பட்டவர்கள் அல்ல. சிட்னியிலேயே "ஒப்பல் டவர்" போல மூன்று நான்கு கட்டடங்களை நிர்மாணித்தவர்கள். ஆக, இவர்களை முழுமையாக குற்றஞ்சாட்டிவிடவும் முடியாது. அதேவேளை, இந்தப்பிரச்சினைக்கு உடனடியாக பொறுப்பெற்றுக்கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டியதும் முக்கியமான படிமுறை.

உடனே, தங்களது "பாரம்பரிய முறைப்படி" நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத் தரப்பினர், இந்தகட்டடத்துக்கான அனுமதி பழைய லேபர் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டது என்றும் இதில் ஏதாவது தவறு இடம்பெற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கு தாங்கள் பொறுப்பல்ல, கவுன்ஸிலின் முன்னாள் லேபர் நிர்வாகவே பொறுப்பென்றும் விரல் காட்டியுள்ளனர்.

ஆனால், தற்போது பிரச்சினை லேபரா - லிபரலா என்பதல்ல.

நடுத்தெருவில் நிற்கும் மக்களுக்கான தீர்வு என்ன, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலைக்கு யார் பொறுப்புக் கூறுவது, அவர்கள் செலுத்திய பணத்துக்கான வீடு மீளவும் கிடைக்குமா, இல்லையென்றால் மாற்றுத்தீர்வு என்ன?

இவ்வாறு, என்னை சாப்பாட்டுக்கடையில் பிடித்துக் கேள்வி கேட்ட ஐயா போன்ற பலருக்கு பல சந்தேகங்கள் முளைத்து, இரண்டு வாரத்தில் அவை பூத்தும் விட்டன.

(11ஆம் பக்கம் பார்க்க)








The Bathla Group
BUILDING DREAMS TOGETHER

JOB VACANCIES JOB VACANCIES JOB VACANCIES

*We are a well-established property developer and builder specialising in delivering quality homes in Sydney's western suburbs. We have a significant number of town-house subdivision and apartment projects under construction, predominately in the Western Sydney.*
***We are seeking experienced Construction Site labourers, Handyman, Carpenters, Landscapers, Tilers, Bricklayers, Painters, Kitchen Installers, concreters & Metal Roofer including Facia & Gutter to join our construction team.***
***All work is in the Western Sydney Area and there is a real opportunity to form a continuous relationship with us for the long term.***

*These roles can include anything from site cleans, demolition, jack hammering, trenching, concrete labouring, using all sorts of different hand and power tools. The work may involve demolition and remedial services, and requires experience with various power tools and a good understanding of safety to work on construction project.*

*Requirements:*
- *Construction experience*
- *Power tools experience*
- *Own transport*
- *Reliable, honest and have a solid work ethic*
- *Safety Awareness*

**எமது கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிவதற்கு ஆட்கள் தேவை**
- கட்டுமானத்துறை பணியாளர்
- ஹாண்டிமான்
- கார்பென்டர்
- லாண்ட்ஸ்கேப்பர்
- ரைல்ஸ் பதிப்பவர்
- பிறிக்லேயர்
- பெயின்டர்
- சமையலறை இன்ஸ்டோலர்
- கொன்கிறீட்டர்
- Metal Roofer Including Facia Gutter

அனுபவம் வாய்ந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு : applications@bathla.com.au
Mohit or Manish : 02 9636 2465

Property Buyers can also contact our sales division (Western Sydney Property Group) at 1300 887 839



Western Sydney Property Group
A DIVISION OF THE BATHLA GROUP
BUY DIRECT FROM THE BUILDER 1300 887 839

# பத்தாவது மாடியில் பசியெடுத்த காலன்!

**(10ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இவர்களுக்கு யார் பதில் சொல்வது என்பதுதான் பெரும் பிரச்சினையாகியிருக்கிறது.

இந்தஒபல்டவரில்பொதுமக்கள்வாங்கிய அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் விலையொன்றும் சாதாரணமானது அல்ல. வீடு கட்டப்பட்டிருக்கும் உயரத்தைப்போலத்தான் அவற்றின் விலைகளும்.

ஒரு படுக்கையறையை மாத்திரம் கொண்ட குடியிருப்பின் விலை 620 ஆயிரம் டொலர். இரண்டு படுக்கையறைகளை கொண்ட வீட்டின் விலை 935 ஆயிரம் டொலர். கிட்டத்தட்ட 165 மில்லியன் டொலர்களுக்கு கட்டிய இந்த கட்டட விருட்சத்தை கொள்ளை விலைக்கு பொதுமக்களுக்கு விற்றுத்தீர்த்தவர்கள் இப்போது அந்த மக்களுக்கு ஒரு பதில் சொல்லவேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆனால், அந்தக் கட்டடத்தை என்னதான் திருத்தினாலும், இனிமேல் எதுவும் நடக்காது என்று எவ்வளவுதான் கற்பூரத்தின் மீது அடித்து சத்தியம் செய்தாலும் யாரும் அந்தப்பக்கம் போவதற்கு தயாரில்லைஎன்றுபொதுமக்கள்தரப்பில்தெரிவிக்கப்படுகிறது. சொந்தப்பணத்தில் சுடுகாட்டில்போய் படுத்திருப்பதற்கு யாரும் விரும்ப மாட்டார்கள்தானே? அவர்கள் தரப்பிலும் நியாயம் இருப்பதை மறுத்துவிட முடியாது.

இந்தமாதிரியானசூழ்நிலைகளில்காப்புறுதிக்கூட்டுத்தாபனங்களும் மிகப்பெரிய கூட்டுப்பொறுப்பாளிகளாக உள்ள அரசாங்கமும் என்ன விதமான நடவடிக்கை எடுக்கவுள்ளன என்பதை ஒட்டுமொத்த நாடும் உற்றுக்கவனித்துக்கொண்டிருக்கிறது.

ஊடகங்களும் ஒவ்வொரு நாளும் ஒரு செய்தியை வெவ்வேறு திசையிலிருந்து அடித்துவிடுகின்றன.

என்ன நடக்கப்போகிறது என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

புரியாணித்தட்டை தூக்கிக்கொண்டு போய் கை கழுவிய ஐயா, கிட்டவாக வந்து இப்படி சொல்லிவிட்டுப்போனார்.

"தம்பி நான் கடவுளை நம்பாட்டியும், கர்மாவை நம்புற ஆள் தம்பி. திரும்பவும் சொல்லிறன், கடலால அந்தரிச்சு வந்த சனம் போட்ட சாபம் தம்பி இது"

# நாடு சிறக்க வேணும்; நல்ல மழை பொழிய வேணும்!



தேவீஸ்வர்

எனது அப்புவுக்கு அதாவது எனது அம்மாவின் தந்தைக்கு, அவரது வாழ்நாள் பூராகவும் தீராத ஒரு சந்தேகம் இருந்தது."இண்டைக்கு என்ன தேதி?"

தனது சந்தேகத்தை எனது அம்மாவிடம் கேட்டு அவர் தீர்த்துக் கொள்வார். திகதி தனக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும் அவரைத் திருப்திப்படுத்துவதற்காக, சுவரில் மாட்டியிருக்கும் மெய்கண்டான் கலண்டரை கழற்றி எடுத்து, அவருக்கு அருகில் வந்து நின்று, அம்மா பவ்வியமாகச் சொல்லுவா.

"இண்டைக்கு இத்தனையாம் திகதி!"

அவரது அடுத்த சந்தேகம்.

"அவனுக்கோ... எங்களுக்கோ?" அதாவது, ஆங்கிலத்திகதியா? தமிழ்த்திகதியா என்பது அதன் பொழிப்பு. அம்மா கொஞ்சம் சலித்துக் கொண்டே இரண்டையும் செல்லுவா!

அப்புவின் பாஷையில் சொன்னால் "ஓஹோ! அவனுக்கு இப்ப புது வரியம் பிறந்திருக்குது."

'அவன்' தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசங்களையெல்லாம் ஆண்டவன் என்பதால், ஜனவரி முதலாம் திகதியில் நாங்களும் புதுவருஷத்தை வரவேற்கிறோம்.

அவனது கலண்டர் கிரிகோரியன் கலண்டர். உலகின் பெரும்பாலான பகுதிகளில் நடைமுறையில் இருப்பது இந்த நாட்காட்டி. நிர்வாகச் சுகத்துக்காக கிரிகோரியன் நாட்காட்டியை உலகில் வாழும் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றினாலும் - பழம் பெரும் நாகரீகச் சிறப்புக்களைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மக்கள் திரளுக்கும் தனித்தனியான நாட்காட்டிகள் உண்டு.

சந்திர வட்டப் பாதையை அல்லது சூரிய வட்டப் பாதையை அடிப்படையாகக் கொண்டு இந்த நாட்காட்டிகள் கணிக்கப்படுகின்றன.

தொல் தமிழர்களிடையே சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டியே புழக்கத்தில் இருந்தது. அதனால்தான் மாதத்துக்கு திங்கள் எனக் காரணப் பெயர் உண்டாயிற்று. ஆண்டவர்கள் மாறியபோது கணக்கீடுகளும் மாறின. தமிழ்ப் பிரதேசமும் உள்ளடங்கிய இந்தியப் பெருநிலப்பரப்பில் சந்திரனும் சூரியனும் கலந்த ஒரு 'ஹைபிரிட் பஞ்சாங்கக் கலண்டர்' இப்போது பயன்பாட்டில் இருக்கிறது.

மேலைத்தேசங்களில் ஒரு காலகட்டத்தில் உபயோகத்தில் இருந்த ரோமானிய நாட்காட்டியில் ஓர் ஆண்டில் 304 நாட்கள், பத்து மாதங்களாக வகுக்கப்பட்டு இருந்ததாகக் கணக்கிட்டார்கள். ஆகஸ்ட், ஜூலை ஆகிய மாதங்கள் அப்போது இருக்கவில்லை.

ஜூலியஸ் சீசர் தனது பெயரில் ஜூலை மாதத்தைச் சேர்த்தார். பின்னர் வந்த அகஸ்டஸ் சீசர் தனது பெயர் விளங்குவதற்காக தனது பெயரில் ஆகஸ்ட் மாதத்தைப் புகுத்தினார். கணக்கீடுகள் எல்லாமே குழம்பிவிட்ட காரணத்தால் இவர்களுக்கு பின்னர் வந்த பதின்மூன்றாவது கிரிகோரி என்ற பாப்பரசர் சில திருத்தங்களைச் செய்ததன் பயனாக உருவான கிரிகோரியன் நாட்காட்டி மேலைத்தேசங்களில் புழக்கத்துக்கு வந்து, நாளடைவில் முழு உலகிலும் பரவியது.

பூமி ஒரு தடவை சூரியனைச் சுற்றி வர எடுக்கும் காலமான 365 நாட்கள் 5 மணித்தியாலங்கள், 48 நிமிடங்கள், 46 வினாடிகளைக் கொண்டது ஒரு கிரிகோரியன் ஆண்டு.


ஆனால், 365 நாட்களைக் கொண்ட நாட்காட்டியை எகிப்தியர்களே முதன்முதலாக உலகுக்கு அறிமுகம் செய்தார்கள் என்ற செய்திகள் உண்டு. மாபெரும் பாரசீகக் கவிஞரும், கணித வல்லுனருமான உமர் கய்யாம் அவர்களே பூமி சூரியனைச் சுற்றும் காலத்தை மிகத் துல்லியமாகக் கணித்து முதன்முதலில் உலகுக்கு அறிவித்தார் என்றும் கூறப்படுகிறது.

ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்துக்கு முற்பட்ட காலத்தை 'இருண்ட காலம்' என 'அவர்கள்' சொல்கிறார்கள். அவர்களுக்கு அது இருண்ட காலம் என்பது உண்மைதான். ஆனாலும் அறிவுலகம் அவர்களுக்கு வெளியே - இந்தியாவிலும், சீனாவிலும், பாரசீகத்திலும், அரேபியாவிலும் கனன்று கொண்டேயிருந்தது. இன்றைய நவ விஞ்ஞானத்தின் அடிப்படைகள் யாவும் இந்தப் பிரதேசங்களிலிருந்து அவர்களால் களவாடப்பட்டவைதாம். "அவர்கள்" அவற்றைச் செம்மைப்படுத்தி இலகுவான கணிப்பீடுகளாக மாற்றினார்கள்.

இந்தியப் பெருநிலப்பரப்பில் பல்வேறு பெரு நாகரீகங்கள் முட்டி மோதிக் கலந்திருக்கின்றன.

கலைஞருக்கும் அம்மாவுக்கும் இடையே நிகழ்ந்த தமிழ்ப் புத்தாண்டைப் பற்றிய குடுமிப் பிடிச் சண்டை மிகவும் பிந்தியதொரு சுவாரசியம்.

சித்திரைப் புத்தாண்டு தமிழருக்கானது அல்ல, தை முதல் நாள் - அதாவது பொங்கலன்றே - எமது புத்தாண்டை நாம் கொண்டாட வேண்டும் என்று கலைஞர் கருதிச் செயற்படுத்த விழைந்தார். அவர் பதவி இழந்ததும் அம்மா முரண்டு பிடித்து பழையபடி சாலிவாஹன ஆண்டுக் கணக்கீட்டின் அடிப்படையில் சித்திரை முதல் நாளையே தமிழருக்கும் புத்தாண்டாக அறிவித்தார்.



சித்திரைப் புத்தாண்டு தமிழருக்கானது அல்ல, தை முதல் நாள் – அதாவது பொங்கலன்றே – எமது புத்தாண்டை நாம் கொண்டாட வேண்டும் என்று கலைஞர் கருதிச் செயற்படுத்த விழைந்தார். அவர் பதவி இழந்ததும் அம்மா முரண்டு பிடித்து பழையபடி சாலிவாஹன ஆண்டுக் கணக்கீட்டின் அடிப்படையில் சித்திரை முதல் நாளையே தமிழருக்கும் புத்தாண்டாக அறிவித்தார்.

வடமொழிகளின் செல்வாக்குக்கு உட்பட்ட சாலிவாஹன ஆண்டுக்கணக்கீட்டுமுறைமை இந்தியப் பெருநிலப்பரப்பு முழுவதிலும் புழக்கத்தில் இருக்கிறது. சாலிவாஹனன் என்ற வட இந்திய மன்னன் விக்கிரமாதித்யனுக்கு எதிராகப் பெற்ற பெரு வெற்றியொன்றின் அடிப்படையில் சாலிவாஹன ஆண்டு அல்லது சக ஆண்டு கணக்கிடப்படுகிறது.

வியாழன், சனி ஆகிய கிரகங்களின் சூரியச் சுற்று வட்டக்காலங்களின் பொதுமடங்குகளின் சிறியதான (பொ.ம.சி) அறுபது ஆண்டுக் கணக்கீட்டு முறையும் எம்மிடையே பஞ்சாங்கம் பார்ப்பதற்காகப் பயன்பாட்டில் இருக்கிறது. இந்தக் கணக்கீடு, நேர்கோட்டு வடிவில் இல்லாமல் வட்ட வடிவில் அமைந்த ஒன்று. அகோரம் விகாரமான பெயர்கள் அந்த ஆண்டுகளுக்கு இருக்கின்றன.

வில்லங்கமான ஒரு கதையும் உண்டு. மஹா குழப்படிக்காரரான நாரதருக்கு ஒருதடவை காமம் மீதூரப் பெற்றதால் அதைத் தணித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு வீட்டின் கதவுகளையும் தட்டினாராம். எல்லாப் பெண்களும் கிருஷ்ணன்மீது மட்டுமே தமக்கு காதல் இருப்பதாகச் சொல்லி கதவை அடித்துச் சார்த்தி விட்டார்கள். வெறுத்துப்போன நாரதர் கிருஷ்ணனிடமே போய் முறையிட்டு, "என்னைப் பெண்ணாக மாற்றி நீயே என்னுடன் கூடி எனது மோகத்தைக் கொல் அல்லது என் மூச்சை நிறுத்து" - எனப் புலம்பினாராம். ஏற்கனவே சிவபெருமானுக்காக மோஹினி வடிவம் எடுத்து ஐயப்பனைப் பெற்ற கடுப்பில் இருந்த கிருஷ்ணன், அதற்குப் பழி வாங்கும் முகமாக நாரதரைப் பெண்ணாக மாற்றி அறுபது புத்திரர்களைக் கொடுத்தாராம். அவைதான் பிரபவம் முதல் அட்சயம் வரையிலான அறுபது ஆண்டுகள் ஆயினவாம்.

நம்புங்கள்!

இவற்றுடன், கி.மு, கி.பி.

ஒரே குழப்பம்.

தென்னவர் கோனாகிய கலைஞர் இவற்றுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கி தமிழர்களுக்கான தனித்துவமான ஆண்டுக் கணிப்பீட்டை உருவாக்குமாறு மறைமலை அடிகள் தலைமையில் ஐந்நூறு தமிழறிஞர்களைக் கொண்ட ஓர் அவையை உருவாக்கினார்.

கிறிஸ்துவுக்கு 31 ஆண்டுகள் முன்னராக சென்னையின் மயிலாப்பூரில் - உலகத்துக்கு அறமும், பொருளும், காதலும் போதித்த தொல் தமிழரான திருவள்ளுவர் பிறந்தார் என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் திருவள்ளுவர் ஆண்டைச் சிபாரிசு செய்தார்கள்.

கலைஞர் அரசாணை பிறப்பித்தார். இன்றளவும் தமிழகத்தின் அரசாணைகளில் உத்தியோகபூர்வமாக திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கீடு இருக்கின்றது. ஆனால் பண்டிகையை மட்டும் அம்மா மீண்டும் சித்திரைக்கு மாற்றி விட்டார்.

சற்று ஏறத்தாள இதே காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆள்புலத்தில் தை முதல்தேதியை தமிழர்களின் புத்தாண்டாகக் கொண்டாடுவதற்கு அனுசரணை வழங்கினார்கள். தாங்களும் கொண்டாடினார்கள். கொண்டாட்டம் என்றால் மச்சம் மாமிசம் இல்லாமலா? எனவே சில ஏரியாப் பொறுப்பாளர்கள் மச்சப் பொங்கல் பொங்கிய சம்பவங்களும் நடந்தேறின. பிறகு, அது பிரச்சினையாக்கப்பட்டு தலைவர் வரை சென்றதாகவும் அவர் சில முசுப்பாத்தியான தண்டனைகள் வழங்கியதாகவும் தகவல் உண்டு.

இலங்கையில் சிங்கள தமிழ்ப் புத்தாண்டு. அதைவிட பௌத்தர்களுக்கு புத்தர் பரிநிர்வாணம் அடைந்த தினத்திலிருந்துதான் ஆண்டுக் கணிப்பீடு தொடங்குகிறது. இஸ்லாமியர்களுக்கு முகம்மது நபி அவர்கள் மெக்காவிலிருந்து மெதீனாவுக்கு புலம் பெயர்ந்து சென்ற தினத்திலிருந்துதான் வருடக் கணக்கீடு தொடங்குகிறது. இவற்றுடன் முரண்படுவது நாகரீகமாகாது.

எனவே புது வருடக் கொண்டாட்டங்கள் பல. நல்லதே அது!

கொண்டாட்டங்கள் குழந்தைகளுக்குக் குதூகலம் தருகின்றன. எனவே எல்லோரும் கொண்டாடுவோம். எல்லாவற்றையும் கொண்டாடுவோம்.

நாடு சிறக்க வேணும். நல்ல மழை பொழிய வேணும்! வேறென்ன வேணும்!


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தைத்திருநாள் நல் வாழ்த்துகள்
moving to
14/38 Mccrae Street, Dandenong VIC3175
தாயக கலாசார ஆபரணங்கள் மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

Victorian Tamil Cultural Association
25 SILVER JUBILEE

**MKS Spices'n Things**
*Finest Quality Guaranteed*

ஆதரவில்

## விக்ரோறியா தமிழ் கலாச்சாரக்கழகம் பெருமையுடன் வழங்கும்

# தமிழ்புத்தாண்டு விழா 2019

**தமிழர் திருநாளாம் தைத்திருநாளை
அனைவரும் இணைந்து கொண்டாடுவோம்**

மெல்பேனில் புகழ்பூத்த கலாலயங்களின் கலை நிகழ்ச்சிகளாக
நடனம், இன்னிசை மற்றும் சிறப்பு நிகழ்வுகளும் நடைறெும்.
VCE பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுத்த மாணவர்களுக்கும் மற்றும்
98 உம் அதற்கு மேற்பட்ட புள்ளிகளை (ATAR) எடுத்த முதல்
10 மாணவர்களுக்கும் விக்ரோறியா பல்லினக் கலாச்சார அமைப்பினால்
சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

**அனுமதி இலவசம்/FREE ENTRY**

## 19 JANUARY 2019 (SATURDAY)
**Rowville Secondary College Performing Arts Centre
Humphreys Way, Rowville VIC 3178
from 5.30 pm onwards**

**அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.**





தொடர்புகளுக்கு

பிரகாஷ்: 0410740409 குகன்: 0403293293 கிரி: 0404058268


உங்கள் அதிநவீன பாதுகாப்புத் தேவைகளுக்காக இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
Data & Tele-communication From $99*
IP / HD CCTV Systems From $880*
Digital TV Antenna
Video Intercom From $440*
Security Alarm From $550*
Alarm Monitoring From 0.75c+
Smart Home
Access Control From $1600*
Security Fog System
Solar CCTV From $150*
Ducted Vacuum From $1250*
We are registered and licensed by Victoria Police.
* Standard Installation, 3 Year parts (Manufacturer Defects) & 3 Year Labor Warranty !!
+ 0.75c Per day, 6 Months Up Front Payment
UTECH SOLUTIONS
Corporate Group
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174
Private security Business License: 910-932-10S
Protect your Home & Family, Secure your Premises & Business.

# காலமான காலம் - 2018




**ஜனவரி 15** - படைப்பாளி ஞானி மரணம்!

**ஜனவரி 16** - அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளிநடப்பு.

**ஜனவரி 22** - இலங்கை கலைஞர் ஏ.ஈ. மனோகரன் மரணம்!

**ஜனவரி 23** - பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபரை மண்டியிட வைத்து மன்னிப்புக் கோரச் செய்த ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க கைது.

**பெப்ரவரி 03** - சுதந்திர தினத்தை முன்னிட்டு காலிமுகத் திடலில் நடைபெறவிருந்த மடிக்கணணி (லப்டப்) ஆட்டத்துக்கு ஜனாதிபதி தடை.

**பெப்ரவரி 04**- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம்

**பெப்ரவரி 04** - ஈழத்து கவிஞர் செழியன் மரணம்!

**பெப்ரவரி 04** - மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள பேர்ச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையானரான அர்ஜுன் அலோசியஸ் மற்றும் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோர் கைது!

**பெப்ரவரி 04** - பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றும் இராணுவ அதிகாரி ஒருவர், தூதரகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழர்களுக்கு சைகை மூலம் அச்சுறுத்தல் விடுப்பு.

**பெப்பரவரி 06** - ஆஸ்திரேலியாவின் தேசியக்கட்சித்தலைவர் பார்னபி ஜோய்ஸ் அவரது பிரத்தியேக செயலாளர் பெண்மணியுடனான உறவில் அவருக்கு குழந்தை உண்டான செய்தி அம்பலமானது.

**பெப்ரவரி 10** - இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

**பெப்ரவரி 23** - கிங் ரத்தினத்தின் இயக்கத்தில் "கோமாளி கிங்ஸ்" தமிழ் திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகியது.

**பெப்ரவரி 23** - ஆஸ்திரேலியா தேசியக்கட்சி தலைவர் பார்ணபி ஜொய்ஸ் கட்சித்தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா.

**பெப்ரவரி 24** - நடிகை சிறிதேவி மரணம்!

**மார்ச் 02** - கண்டி, திகண பகுதியில் சிங்கள- முஸ்லிம் மக்கள் மோதல்

**மார்ச் 22** - அறிவியல் தந்தை ஸ்டீபன் ஹோக்கிங் மரணம்

**மார்ச் 25** - தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் பந்தைச்சுரண்டி குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீப் ஸ்மித் உட்பட மூன்று வீரர்கள் சர்வதேச போட்டிகளிலிருந்து இடைநிறுத்தம்.



**ஏப்ரல் 04**- பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

**ஏப்ரல் 27** - நடிகர் வினுச்சக்கரவர்த்தி மரணம்!

**மே 2** - முதுபெரும் சிங்களப் படத் தயாரிப்பாளர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிச் சடங்கு இடம்பெற்றது.

**மே 15** - எழுத்தாளர் பாலகுமாரன் மரணம்!

**மே 18** - உலகெங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

**மே 19** - தென்னிலங்கையில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளத்தால் 13 பேர் உயிரிழப்பு! ஒரு லட்சம் பேர்வரை பாதிப்பு.

**மே 24** - இலங்கை கிரிக்கட் அணி வீரர் தனஞ்சய சில்வாவின் தந்தை சுட்டுக்கொலை.

**மே 31**- இலங்கையின் புதிய வரைபடம் வெளியிடப்பட்டது. கொழும்பு போர்ட் சிட்டி உள்ளடக்கப்பட்டது.18 வருடங்களின் பின்னரான முதலாவது மாற்றம் இதுவாகும்.

**ஜூன் 01** - எரியூட்டப்பட்ட யாழ். நூலகத்தின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு.

**ஜூலை 15**- ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பிரான்ஸ் 4-2 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வென்றது.

**ஓகஸ்ட் 7** - கலைஞர் கருணாநிதி மரணம்!

**ஓகஸ்ட் 16** - இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மரணம்!

**ஓக்ஸ்ட் 18** - ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான் மரணம்!

**ஓகஸ்ட் 21** - ஆஸ்திரேலிய பிரதமர் மல்கம் ரேன்புல்லுக்கு எதிராக அமைச்சர் பீற்றர் டட்டன் தலைமையிலான குழுவினர் தலைமைத்துவ சவால்!

**ஓகஸ்ட் 24** - மல்கம் ரேன்புல் லிபரல் கட்சித்தலைவர் பதவியிருந்து இராஜினாமா. ஸ்கொட் மொறிஸன் புதிய பிரதமராக பதவியேற்ப்பு

**ஓகஸ்ட் 26** - தென்கொரியாவில் நடைபெற்ற கரம் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கை அணி இந்தியாவை வென்று சம்பியனானது.

**ஓகஸ்ட் 31** - மல்கம் ரேன்புல் அரசியலிலிருந்து ஓய்வு.

**செப்ரெம்பர் 9** - இலங்கை ஆசிய வலைப்பந்து அணி, சிங்கப்பூரை வென்று சம்பியன் ஆனது. ஐந்தாவது தடவையாகவும் தர்ஜினி சிவலிங்கம் தொடர் நாயகியானார்.

**செப்ரெம்பர் 15** - ஆசிய ஆண்கள் கரப்பந்தாட்டப் போட்டி முதன்முதல் இலங்கையில் ஆரம்பம். இலங்கைக்கு மூன்றாம் இடம்.

**செப்ரெம்பர் 21**- முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க பிரான்ஸ் நாட்டின் அதியுயர் விருதைப் பெற்றார். இந்த அதியுயர் விருதைப் பெற்ற முதல் இலங்கையர் இவரே.



**ஒக்டோபர் 2** - சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோஜி படுகொலை!

**ஒக்ரோபர் 24**- வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார்.

**ஒக்ரோபர் 26** - இலங்கை அரசியலில் திடீர் திருப்பமாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச புதிய பிரதமராகப் பதவியேற்றார். ரணில் விக்ரமசிங்கவின் வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு பறிக்கப்பட்டது.

**ஒக்ரோபர் 29** - பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ச பிரதமராகத் தன் கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

**ஒக்ரோபர் 29** - மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் புதிய அமைச்சரவை பதவியேற்றது. நிதி மற்றும் பொருளாதாரத்துறை அமைச்சராக மகிந்த ராஜபக்ச பொறுப்பேற்றுக் கொண்டார்.

**நவம்பர் 04** - நாடாளுமன்றம் நவம்பர் 14 ஆம் திகதி கூட்டப்படும் என ஜனாதிபதி அறிவிப்பு.

**நவம்பர் 05** - அரசியல் குழப்பநிலை குறித்து, ஜே.வி.பி. – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் பேச்சு.

**நவம்பர் 09** - மெல்பேர்ண் நகருக்குள் வாகனமொன்றை ஓட்டிவந்து வெடிக்கவைத்துவிட்டு, அதிலிருந்து இறங்கி பொதுமக்களை கலைத்து கலைத்துக் கத்தியால் குத்திய நபரால் களேபரம். அப்பாவி ஒருவரும் தாக்குதலாளியும் சம்பவத்தில் உயிரிழப்பு!

**நவம்பர் 09** - நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் விடுப்பு. பொதுத்தேர்தலுக்காக 2019 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி அறிவிப்பு.

**நவம்பர் 09**- இங்கிலாந்துக்கு எதிராக காலி டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளில் இலங்கை அணி தோல்வி. அந்தப் போட்டியுடன் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரங்கன ஹேரத் சர்வதேசக் போட்டிகளிலிருந்து ஓய்வு!

**நவம்பர் 11**- பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி சிறிலங்கா பொதுஜன முன்னணியில் இணைவு.

**நவம்பர் 11** - தமிழ்நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் வணக்கம் செலுத்தினார்.

**நவம்பர் 13** - நாடாளுமன்றம் கலைப்பு இடைநிறுத்தம் – உயர்நீதிமன்றம் உத்தரவு.

**நவம்பர் 14** - நாடாளுமன்றம் கூடியது. மஹிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றம். சபைக்குள் பெரும் அமளி துமளி.

**நவம்பர்14** - யாழ்போதனா வைத்தியசாலையில்தாயொருவருக்கு ஒரே சூலில் 3 குழந்தைகள் பிரசவம் .

**நவம்பர் 15** - மஹிந்தவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதி நிராகரித்தார். இரண்டாவது நாளாகவும் நாடாளுமன்றத்தில் மோதல். மிளகாய்த்தூள் கலந்த தண்ணீர் தாக்குதல். எம்.பிக்கள் இருவர் காயம்.

**நவம்பர் 15** - நாடாளுமன்றத்தில் மஹிந்த விசேட உரை.

**நவம்பர் 22** - பாலி – 8 எனப்படும் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்ட ஆஸ்திரேலிய போதைப்பொருள் கடத்தல் கும்பலின் முதலாவது நபர் தனது தண்டனைக் காலத்தை நிறைவு செய்து சிறையிலிருந்து விடுதலை.

**நவம்பர் 22** - மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்.

**நவம்பர் 23** - மஹிந்தவுக்கு எதிராக 122 எம்.பிக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல்.

**நவம்பர்24** - விக்டோரிய தேர்தலில் லேபர் கட்சி பயங்கர வெற்றி.

**நவம்பர் 26** - யாழ். பல்கலைக்கழகத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்.

**நவம்பர் 26** - தோட்டத் தொழிலாளர்கள் சங்கிலிப் போராட்டம் முன்னெடுப்பு.

**நவம்பர் 27** - தமிழர் தாயகத்தில் மாவீரர் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

**டிசெம்பர் 03** - பிரதமராக மகிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சர்களும் செயற்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை!

**டிசெம்பர் 07** - கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் வான்கதவை மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தார்.

**டிசெம்பர் 12** - ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றம்.

**டிசெம்பர் 13** - நாடாளுமன்றம் கலைப்பு சட்டவிரோதம் – உயர்நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பு

**டிசெம்பர் 15** - தாய்லாந்தில் நடைபெற்ற உலக உடல் கட்டமைப்பு (ஆணழகன்) போட்டியில் இலங்கையைச் சேர்ந்த லூசியன் புஸ்பராஜ் வெற்றி பெற்று உலக சம்பியனானார்.

**டிசெம்பர் 15** - மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை இராஜிநாமா!

**டிசெம்பர் 16**- ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவியேற்பு!

**டிசெம்பர் 21** - எழுத்தாளர் பிரபஞ்சன் மரணம்!

**டிசெம்பர் 30** - மெல்பேர்ண் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணியை தோற்கடித்தது இந்திய அணி.



நேற்றுவரை ஒன்றுமே இல்லாத ஆட்களை எல்லாம் திடீரென உச்சத்தில் தூக்கி வைப்பதில் ஜெயலலிதாவுக்கு நிகர் ஜெயலலிதாதான். கேசட் விற்ற வர்களைக் கட்சித் தலைவர்களாக்குவார், தொகுதியில் யாருக்குமே தெரியாத ஒருவரை எம்.எல்.ஏ ஆக்கு வார், யாருக்குமே தெரியாத டீ விற்றவரை திடீரென முதல்வர் ஆக்குவார், மியூசிக்கல் சேர் முறையில் யாரை யாவது அமைச்சர் ஆக்குவார். அவர் புண்ணியத்தில் எடப்பாடிகூட முதல்வர் ஆனார். அவர்கள் இதெல்லாம் பத்தாது என இறந்த பிறகும் அதைச் செய்திருக்கிறார். யாருமே கண்டுகொள்ளாத இட்லிக்கு ஒரே நாளில் சிறப்பு உணவு அந்தஸ்து கொடுத்திருக்கிறார்.

அடுத்தடுத்த காலகட்டத்தில் - கால் நூற்றாண்டுக் கும் மேலாக - எதிர் எதிர் துருவங்களாக அரசியல் செய்த தலைவர்கள் இருவர் இரு பெரிய மருத்துவ மனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற்றார்கள். சிகிச்சை பலனின்றி இறந்தார்கள்.

ஆனால் ஒரு தலைவருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர்கள் அவருக்கான புகழஞ்சலி கூட்டங்களி லும், சிலை திறப்பு விழாக்களிலும் கலந்து கொள்கிறார் கள்.

இன்னொருவருக்கு சிகிச்சை அளித்தவர்களோ விசாரணை ஆணையங்களில் சாட்சி சொல்லிக் கொண் டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்ததைப்போல ஜெய லலிதா சிகிச்சை பில்லை அப்பல்லோ வெளியிட்டி ருக்கிறது. ஜெயலலிதாவின் சாப்பாடு செலவு ஒரு கோடியே பதினேழு லட்சம் ரூபா. சிகிச்சை அளிக்க வந்த ரிச்சர்ட் பேல் எனும் டாக்டருக்கு தொண்ணூற்றி இரண்டு லட்சம் ரூபா. மற்றொரு டாக்டர் மவுண்ட் எலிசபத்துக்கு ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபா!!

கொஞ்சம்கூட மனசாட்சியே இல்லாமல் சர்க்கரை நோயில் அவதிப்பட்ட ஒரு முதிய பெண்ணுக்கு இவ்வ ளவு செலவு கணக்குக் காட்டியிருக்கிறது அப்பல்லோ நிர்வாகம்.

ஒரு படத்தில் யோகி பாபு, தன்னிடம் தொழில் கற்று தன்னையே ஏமாற்றப் பார்த்த ஒருவனிடம், "எனக்கே விபூதி அடிக்கப் பாத்தேல?" என்பார். அது தான் ஜெயலலிதா விஷயத்திலும் நடந்திருக்கிறது. ஜெயலலிதாசட்டசபையில், "இந்தத்திட்டத்துக்குமூவா யிரம் கோடி ஒதுக்குகிறேன். அந்த திட்டத்துக்கு நாலாயிரம் கோடி ஒதுக்குகிறேன்" - என்றெல்லாம் இஷ்டத்துக்கு ஒதுக்கித் தள்ளுவார். ஆனால் திட்ட மும் நடக்காது. கஜானாவில் காசும் இருக்காது. இதே வழிமுறையை பின்பற்றிதான் ஜெயலலிதாவுக்கே விபூதி அடித்திருக்கிறார்கள் அப்பல்லோ - சசி - தினகரன் கூட்டணி. கோடிக்கணக்காக சாப்பாட்டு கணக்கு காட்டிவிட்டு அவருக்கு இட்லி மட்டும் கொடுத்து ஏமாற்றியிருக்கிறார்கள்.

ரிச்சர்ட் பேல், மவுண்ட் எலிசபத் டாக்டர்களுக்கு ஏன் இவ்வளவு பணம் என சந்தேகம் வரலாம். வெள்ளைக்காரர்கள் நம் ஆட்களைப் போல் இல்லை. பொய் பேச மீற்றருக்கு மேல் காசு கேட்பார்கள். மக்களை எல்லாம் எவ்வளவு மடையர்களாக நினைத் திருந்தால் கொஞ்சம்கூட கூச்சநாச்சமின்றி இப்படி ஒரு மருத்துவ செலவு கணக்கை காட்டுவார்கள்? இத்தனைக் கும், சிகிச்சை பெற்றபோது ஜெயலலிதா முதல்வர். முதல்வராக இல்லாமலிருந்து கொடநாட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தால் அங்கேயே வைத்து யாருக் கும் சொல்லாமல் புதைத்திருப்பார்கள். முதல்வராக இருந்ததால்தான் குறைந்தபட்சம் நமக்கு புதிராகவே- னும் நமக்கு விஷயம் தெரிகிறது.

எது எப்படியோ! சசிகலா, ஓ.பி.எஸ், தினகரன், மருத்துவர்கள். அப்பல்லோ ரெட்டி என எல்லோரை யும் 'முறையாக', 'நேர்மையாக' விசாரித்தாலேயொ ழிய மர்மங்கள் வெளிவரவே வராது. அது எப்படி யும் மோடி ஆட்சியில் நடக்காது. ஏனெனில் அடிக் கொருமுறை மத்திய அரசின் "ஏய்ம்ஸ்" டாக்டர்களை அனுப்பி வேவு பார்த்த கூத்தை செய்துவிட்டு கமுக்க மாக இருந்தவர்தான் மோடி! ஆனால் ஒன்றை யோசித் துப் பார்த்தீர்களேயானால், சர்வாதிகாரிகளின் முடிவு பெரும்பாலும் உலகம் முழுமைக்கும் இப்படித்தான் இருந்திருக்கிறது.

நான் சென்ற வாரம் காவிரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். ஏதேதோ உபகரணங்கள் எல்லாம் வைத்திருந்தார்கள். கண்முன்னே எத்தனையோ உயிர்கள் நவீன மருத்து வத்தின் பயனால் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருந் தன. எனக்கு இந்த தமிழ் மரபு மருத்துவம், தமிழ் பாரம்பரிய மருத்துவம், மாற்று மருத்துவம் என் கிற பெயரில் கொலை செய்துகொண்டிருக்கும் செந்தமி ழன், ஹீலர் பாஸ்கர் போன்ற கொலைகாரர்களும், அவர்களை நம்பி உயிரைவிட்டுக் கொண்டிருக்கும் கூட்டமும் ஒருநொடி கண்முன் வந்துபோனார்கள். காவிரி மருத்துவமனையில் ஆறு நாட்கள் தங்கி இருந் தேன். மூன்று வேளையும் உணவு அவர்கள்தான் கொடுத்தார்கள். எண்பதாயிரம் ரூபா பில் வந்தது!

தூத்துக்குடி ஸ்டெர்லைட் விவகாரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் குறித்து சில மாதங்கள் முன்பு "எதிரொலியில்" எழுதியிருந்தேன். அதில் மனித உரிமை ஆணையம் தெரிவித்திருந்த சந்தேகங்களை பட்டியலிட் டிருந்தேன். அவற்றை உண்மை என பறைசாற்றும் வண் ணம் சுடப்பட்டு இறந்தவர்களின் பிரேதப்பரிசோதனை ரிப்போர்ட்கள் வந்துள்ளன. அனைவரும் குறிபார்த்து சுடப்பட்டிருக்கிறார்கள். பின்னால் இருந்து சுட்டிருக்கி றார்கள். அதில் ரோஸ்லின் என்ற மாணவிக்கு பின்னந் தலையில் குண்டு பாய்ந்து வாய் வழியாக வெளியேறி இருக்கிறது. ஜெனரல் டயர்கள் நம்முடன்தான் இன்ன மும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன செய்ய? வெள்ளைக்காரன் ஆட்சி இல்லை என்பதாலும், "இந்திய தேசபக்த" அயோக்கியர்களின் ஆட்சி நடப்ப தாலும் அவர்கள் சுதந்திரமாக எந்த குற்ற உணர்ச்சியும் இன்றி நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கட்டுரையை நான் தட்டச்சு செய்து கொண்டி ருக்கும்போது திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி களை கட்டிக்கொண்டிருக்கிறது. அய்யா வீரமணி, அய்யா சுபவீ, அண்ணன் கொளத்தூர் மணி, கோவை ராமகிருஷ்ணன் போன்ற கருஞ்சட்டை தலைவர்கள் பின்னால் அணிவகுக் கும் லட்சக்கணக்கான கருஞ்சட்டை இளைஞர்களை பார்க்கவே பரவசமாக இருக்கிறது. தமிழகம் அல்லாத ஏனைய இந்தியாவில் பெரியார் இல்லை. எண்ணற்ற கடவுள்கள் இருக்கிறார்கள். எதுவுமே அவர்களை காப் பாற்றவில்லை. தமிழகத்தை கடவுள் இல்லை எனச் சொன்னவர் இன்னமும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் என்ன, முகப்பு வளைவில் மார்க்ஸ் இருக்கிறார். அம்பேத்கர் இருக்கிறார். அயோத்தி தாசர் இருக்கிறார். அவ்வளவு ஏன், பிரபாகரன்கூட இருக்கிறார். பேரறிஞர் அண்ணாவைக் காணோம்!

காரணம் இடமின்மை இல்லை. மனமின்மை. அரசி யல் அறிவின்மை. அல்லது நேர்மையின்மை. "பெரியார் விதைத்ததை அண்ணா அறுவடை செய்துவிட்டார்," என ஏதோ பெரியாரை அண்ணா ஏமாற்றிவிட்டதைப் போல திருமுருகன் காந்தி பேசித் திரிகிறார் அல்லவா? அவரது கைங்கரியமாகக்கூட இருக்கலாம். சரி அதனா லென்ன! யார் யாருக்கு யாரைப் பேசினால் காசு கிடைக் குமோ அவர்களைப் பேசுகிறார்கள். ஓர் ஓரத்திலாவது அவர்கள் புகைப்படத்தை ஒரு டோக்கனைப் போல வைத்துவிட்டு, முக்கியமான தலைவர்களைக்கூட லாபம் தராத காரணத்தால் புறக்கணித்துவிடுகிறார்கள்.

ஆனால் அண்ணா குறித்து பெரியார் என்ன பேசி யிருக்கிறார் என்பதைப் பாருங்கள். "நான் திமுகவுக்கு அது தேர்தல் வெற்றி பெறும்வரை படு எதிரியாக இருந் தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை அடியோடு மறந்து மிக்க பெருந்தன்மையோடு நடந்து கொண்டார். நட்புக் கொள்ள ஆசைப்பட்டு என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையை விட அதிகமாக நடத்தினார். அதன் பயனாக எனக்கும் மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டதுடன் என் அந்தஸ்தும் அதிகமாயிற்று." - விடுதலையில் பெரியார்- 3.2.1969.

அதெப்படி பெரியாரே எதிர்த்துப் பிரசாரம் செய்யும் போது பெரியார் விதைத்ததை எதிரணி அறுவடை செய்ய முடியும். சிறுமதியாளர்களுக்கு என்றுமே ஒரே ஒரு நம்பிக்கைதான். நம் பேச்சைக் கேட்கின்றவனுக்கு வரலாறா தெரியப் போகிறது என்கிற நம்பிக்கைதான் அது.

# நாடும் நாட்டு மக்களும் 02





தமிழகத்திலிருந்து
டான் அசோக்

பிரபஞ்சன் பிரபஞ்சத்துள் ஐக் கியமாகிவிட்டார். எழுத்தாளர் கள் சுவாரசியமானவர்கள். பிரம் மாண்டமானவர்கள். தங்களுக் குள் பிரபஞ்சத்தை உள்ளடக்கிக் கொண்டு ஒரு நடமாடும் ஜாத கச்சீட்டைப்போல வாழ்ந்து கொண் டிருப்பர்கள். ஆனாலும் தமி ழக வெகுஜனத்தின் மத்தியில் அவர் கள் மிகவும் சிறியவர்கள். மைக் ரோஸ்கோபிக் எனச் சொன்னாலும் மிகையில்லை. எழுத்தாளர்கள் இரண்டு விஷயங்களுக்கு கடைசி- வரை ஏங்குவார்கள். ஒன்று பணம். சுயமரியாதைமிக்க எழுத்தாளர்களுக்கு இதுகூட பெரிய பிரச்சினையில்லை. மற்றொன்று அடையாளம். சும்மா போகிற ஒரு சாமானியனிடமாவது, "உங்களை எங்கயோ பாத்தா மாதிரி இருக்கே?" என்பானேயொழிய, ஒரு எழுத் தாளனை செத்தாலும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டான் நம்மூர் சராசரித் தமிழன்.

ஒருமுறை சென்னை அசோக் நகர் ஹாட்சிப்ஸ் உணவகத்தில் அவரைப் பார்த்தேன். ஒரு துணிப்பை யுடன் ஓரமாக நின்று காபி அருந்திக் கொண்டிருந்தார்.

"நீங்க பிரபஞ்சன் சார் தானே?" என்றவுடன் அவ ருக்கு முதலில் ஆச்சரியம். பின்னர்தான் மகிழ்ச்சி வந்தது.

"நான் சினிமாவில் பணிபுரிகிறேன்" - எனச் சொன் னதும் அவருக்கு இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி. பிறகு படைப்புகள் பற்றி ஆர்வமாகக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

இறுதியாக, "நிறையப் படிங்க," என அறிவுரை சொல்லி விட்டுக் கிளம்பினார்.

பின்னர், கொஞ்சநாள் கழித்து அவருக்குப் புற்றுநோய் என அறிந்தேன். புற்றுக்கும், தமிழனுக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. யாரை எங்கே வைக்க வேண் டும் என இருவருக்குமே எப்போதுமே தெரியாது. மருத் துவமனையில் அவரைப் பார்க்கவேண்டும் என்றெல்லாம் எனக்குத் தோன்றவில்லை. காபியை உறிஞ்சிய அந்த ஹாட்சிப்ஸ் முகமே நிலைத்துவிட்டுப் போகட்டும் என விட்டுவிட்டேன்.

"என் விருப்பமெல்லாம் என் எழுத்தைப் போலவே மரணமும்கௌரவமாகஇருக்கவேண்டும்என்பதுதான்," என எழுதியிருக்கிறார் பிரபஞ்சன். பல நூறு வாசகர் கள், எழுத்தாளர்கள் சூழ அரசு மரியாதையுடன் அவ ருக்கு இறுதி மரியாதை நடைபெற்றது. அனைத்து தொலைக்காட்சிகளிலும் அவர் பற்றிய செய்திக்குறிப்பு களை போட்டார்கள். பிரபஞ்சனிடம் இதையெல்லாம் தெரிவிக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் பார்த்த எழுத்தாளர்கள் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். எழுத்தாளர் களை சாவுக்குப் பின் மதிக்க தமிழகம் கற்றுக்கொள்ளத் துவங்கியிருக்கிறது. படிப்படியாக இனி அவர்கள் வாழும் போது மதிக்கவும் கற்றுக் கொள்ளும். நன்றி பிரபஞ்சன் சார்.

(மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்)




Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
$159
புதுப்பித்தல்
$129
SET TOP BOX
INCLUDED
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
NOW AVAILABLE ON LYCATV
SUN NXT + TENT KOTTA + EROS NOW
SALES
0470 030 300 | 0470 216 619
CUSTOMER SERVICE
02 8072 7002
www.lycatv.tv

# பொங்கல் – புத்தாண்டு – வள்ளுவர் தினங்கள்! ஆஸி. மண்ணில் அரங்கேறும் முப்பெரும் விழா!!

ஆஸ்திரேலியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஒரே நேரத்தில் தைத்திருநாளை பெருவிழாவாக நடத்துவதற்கு சில சமூக மேம்பாட்டு அமைப்பினரும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக விழா ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அரன் பிரதாபனை "எதிரொலி" சார்பாக சந்தித்தபோது-

கேள்வி: முப்பெரும் விழா என்றால் என்ன ?

பதில்: தைத்திங்கள் தமிழர்களுக்கு ஒரு முக்கிய மாதமாகும். இம்மாதத்தில் திருவள்ளுவர் தினம், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் ஆகிய பெருவிழாக்களும்கூட உலகெங்கும் வாழும் தமிழர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த மூன்று விழாக்களையும் ஒன்றிணைத்து முப்பெரும் விழாவாக கொண்டாடுவதற்கு ஆஸ்திரேலியா வாழ் தமிழர் அமைப்புக்கள் பலவற்றுடனும் முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளோம்.

கேள்வி: இவ்விழாவின் மூலமாக நீங்கள் அடைய உத்தேசிப்பது என்ன ?.

பதில்: ஆஸ்திரேலியாவில் பரந்து வாழும் தமிழர்களை அவர்கள் சார்ந்திருக்கின்ற அமைப்பு வேறுபாடின்றி 'தமிழர்" என்ற ஒரே அடையாளத்துடன் ஒரே அணியில் திரட்டுவதும் அதனூடாக -

- தமிழ் இளம் தலைமுறைக்கு எம் இனத்தின் கலை, பண்பாடு, கலாசார மற்றும் மெய்யியல் விழுமியங்களை கடத்துவது.
- மற்றைய சமூகங்களுக்கு உலகின் மூத்த குடியாம் தமிழ்க் குடியின் வரலாறு, தொன்மம், இவ்வினத்தின் தனித்துவமான கலாசாரம், பண்பாட்டு மாண்பு பற்றிய புரிதலை ஏற்படுத்துவது
- கனடாவைப்போன்று தை-மாதத்தை "தமிழர் தேசிய மரபு" (Tamil Heritage Month) மாதமாக ஆஸ்திரேலியா அரசு அங்கிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது போன்ற நீண்ட கால சிந்தனையின் சிறு முயற்சிதான் இது.

கேள்வி: முப்பெரும் விழா எங்கே, எப்போது நடைபெறுகிறது?

பதில்: அனைத்து மாநிலங்களின் தலைநகரங்களிலும் இவ்விழாவை ஒருங்கிணைத்து வருகிறோம். Victoria, New South Wales, South Australia வுக்கான விழா நிகழ்ச்சிநிரல் மற்றும் இடங்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டன. மற்றைய மாநில ஒருங்கிணைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ***27.01.2019*** ஞாயிறு காலை ***9.00*** மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

Victoria:
North Melbourne Community Centre
49-53, Buncle street, North Melbourne, Vic 3051

New South Wales:
Parramatta Park, Pitt St - Macquarie St,
Parramatta, NSW 2150.

South Australia:
Woodville North Community Centre
13 th Avenue, Woodville North, SA 5012

கேள்வி: முப்பெரும் விழாவில் எவ்வாறான நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன ?

பதில்: பொங்கல், குழந்தைகளுக்கான குறளுடன் பொருள் வீச்சுப் போட்டி, பேச்சுப் போட்டி, தமிழ் மரபு சார்ந்த கலை - கலாசாரம் மற்றும் தமிழர் விளையாட்டு நிகழ்வுகள், தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றான விருந்தோம்பல் - வாழை இலையில் விருந்து, மோர்ப்பந்தல் என்பனவும் உண்டு.

கேள்வி: இவ்வாறு பெரிய அளவில் முன்னெடுப்புகளை மேற்கொள்ளுவற்கான நிதி மற்றும் பங்களிப்புகள் எங்கிருந்து கிடைக்கின்றன?

பதில்: தற்போது விழாவின் ஏற்பாட்டளார்களின் நிதியைத்தான் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். ஆனாலும் இவ்விழாவின் உயர்ந்த நோக்கம் கருதி தமிழ் உணர்வாளர்களும் தமிழ் வர்த்தகர்களும் தாமாக முன்வந்து உதவினால் ஏற்றுக்கொள்வோம். விழாவுக்கான வரவு - செலவு அறிக்கையை வெளிப்படையாக அறிவிப்போம்.

கேள்வி: ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே பல அமைப்புகள் தைப்பொங்கல் விழாவை பல ஆண்டுகளாக நடத்திவருகின்றபோது, நீங்கள் இவ்வமைப்புகளுக்குப் போட்டியாக இதை ஏற்பாடு செய்கிறீகள் என்ற எண்ணம் எழுமல்லவா ?

பதில்: நிச்சியமாக இல்லை. நீண்ட காலமாக தைப்




பொங்கல் விழாவைக் கொண்டாடும் மற்றைய அமைப்புகளுக்கு மதிப்பளித்து, அவர்கள் கொண்டாடும் விழா நாட்களைத் தவிர்த்து ஒரு பொதுவான விடுமுறை நாளில் இந்த நிகழ்வை நடத்துவதற்கு தேர்வுசெய்துள்ளோம். மேலும் நிகழ்ச்சிகள் எந்த ஓர் அமைப்புக்கும் போட்டியானவையாக அல்லாமல் ஆஸ்திரேலியா வாழ் தமிழர்களை ஒருங்கிணைத்து தமிழர்களின் தனித்துவத்தையும் அடையாளங்களையும் வெளிக்கொணரும் - காட்சிப்படுத்தும் நோக்கத்தில், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற காரணத்தினால் அனைத்து அமைப்புகளும், அமைப்பு சாராத தமிழ் மக்களும் இணைந்து பயணிக்க வேண்டிய வரலாற்றுத்தேவை இருக்கிறது.

அதனால் அனைவரும் சரியான புரிதலுடன் எம் இனத்தின் பெரும்கனவை சுமந்து நிக்கின்ற இளைய தலைமுறை பிள்ளைகளின் இம்முயற்சிக்கு ஆதரவு தந்து 'தமிழர்" என்ற ஒரே அடையாளத்துடன் பங்கேற்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறோம்.

கேள்வி: சரி, இப்பத்திரிக்கையூடாக நீங்கள் மக்களுக்கு ஏதேனும் செய்தி சொல்ல விரும்புகிறீர்களா..?

பதில்: மனித வாழ்வியல் கூறுகளில் தலையானதாக விளங்கும் பண்பாட்டை உலகுக்குக் கற்றுத் தந்த தமிழினம், தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் - சுயநலமில்லாது - எமது இனத்தின் நீண்டகால நலன்கருதி - அர்ப்பணிப்புடன் பயணிக்கவேண்டும்.

எனவே, இவ்விழாவை சிறப்பிக்க தமிழர்கள் அனைவரும் தங்கள் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இவ்விழாவில் ஏதேனும் நிகழ்ச்சியை நீங்களும் சேர்த்துக்கொள்வதற்கு அல்லது உங்களுடைய ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்க விரும்பினால் எமது மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்க முடியும். தொடர்புகளுக்கு : tamilar.events@gmail.com or 0416 2205 95.

SAHA SIDDHA
HERBAL TREAMENT AND YOGA THERAPY
TREATMENTS FOR ALL AILMENTS ARE DONE THROUGH TRIO THERAPHY
(Herbal Treatment, Yoga & Diet plan)
A healthcare professional with a long track record of successfully diagnosing and treating patients using accurate Siddha (HERBAL) medicines along with therapeutic yoga techniques. A Gold Medallist in Doctor of Siddha Medicine



- Abnormal Menstruation
- Arthritis
- Back and neck pain
- Diabetes Mellitus
- Eczema
- Epilepsy
- IBS
- Hemiplegia
- High Cholesterol
- Hypertension
- Impotence & Infertility

DR SELVI MANI B.S.M.S, MD, Y.T.O.T
SIDDHA (HERBAL), YOGA PHYSICIAN
0412618953
74 CARLTON ROAD
DANDENONG NORTH, VICTORIA - 3175
www.siddhaherbsaustralia.com.au

- Urinary Tract Infection
- Jaundice
- Mental disease & disorder
- Loss of Memory
- Obesity
- Peptic ulcer
- Prostate Problem
- Sleep Disorder
- Thyroid Problems
- Tonsillitis
- Wart etc...

*We're the business behind your business.*

**We do everything you could ask for.
So basically we print**

# ANYTHING

**except money.** ツ

Imagine walking into your office and seeing your company's name displayed prominently with a stunning 3D logo. Getting this impressive look and style is easy with dimensional letters from **PostNet Dandenong**.

## POSTNET DANDENONG
WISHES YOU A
WONDERFUL NEW YEAR

## HAPPY NEW YEAR




- Outside Signs
- Window Stickers
- Backlit Signs
- Billboard Signs
- 3D Signs
- Car Wrapping
- One Way Vision
- Lightbox Signs
- Wallpapers
- Posters
- Banners
- Pull Up Banner
- Dye Sublimation
- Street Signs
- T-Shirt Printing
- Magentic Signs

When you truly want to stand out from the competition, dimensional letters in the form of a 3D logo are a great option.

Using only top-quality materials and cutting-edge technology, **PostNet Dandenong** can produce a 3D logo and dimensional letters for virtually any need. Because of our absolute commitment to the integrity of all of our products, each 3D logo we produce is designed to withstand the elements and last many years with enduring beauty and quality.

Whether you choose large exterior dimensional letters to attract attention from the outside of your business or a small brushed metal logo to improve the aesthetic of your indoor office environment, you and your customers are both sure to appreciate the timeless beauty and visual impact of a 3D logo.

## MORE THAN JUST A SIGN COMPANY!

244 LONSDALE STREET
DANDENONG VIC 3175

POSTNET DANDENONG

DESIGN | PRINT | SIGNS | SHIP | MAILBOX

## கேசி தமிழ் மன்றத்தின்

# தமிழர் திருநாள் விக்டோரியா 2019

## THE TAMIL FESTIVAL VICTORIA

**விக்டோரியத் தமிழர்களை ஓரிடத்தில் ஒன்றிணைக்கும்
கேசி தமிழ்மன்றத்தின் தைப்பொங்கல் விழா**

இயற்கைக்கு நன்றி சொல்லி, பொங்கல் பொங்கி மகிழ்ந்திடுவோம்...
தமிழர் எம் கலைச் செழிப்பை காட்டும் கலை நிகழ்வுகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் உங்களை மகிழ்விக்கவிருக்கின்றன!

பாரம்பரிய விளையாட்டுக்கள்
திறந்தமேடை நிகழ்வுகள்
வணிக அங்காடிகள்
உள்ளரங்கு நிகழ்வுகள்
இளவேனில் நூல் வெளியீடு
உங்கள் பானைகளில் பொங்கல்

**Sunday, 20 January 2019**
9:00 a.m. to 4:00 p.m.
at Gaelic Park,
No.324 Perry Road ,
Keysborough, VIC 3173

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்...
உங்கள் பானைகளில் நீங்களே பொங்கி மகிழ்ந்திட
எம்மை தொடர்புகொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு
பிரபா: 0410348448 மணி: 0402988313 மதி: 0412069096 சத்தியன்: 0403436970

# திரைகடலோடியும் திரை மீது தீராக்காதல்

## நடிகர் வரகுணனின் மனப் பகிர்வு

● நிரோஷா ரமேஷ்





யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வரகுணன், லண்டன் வாழ் ஆங்கிலத் திரைப் படக் கலைஞர்களுக்கு , சவால் விடும் வகையில் ஆங்கிலத் திரைத் துறையில் நடித்து வருகின்றார். ஆரம்பத்தில் ஊடகத்துறையில் பணியாற்றினாலும் நடிகன் என்ற அடையாளத்தையே பெரிதும் விரும்பும் வரகுணனுக்கு , 80, 90 களில் மேடை நாடகக் கலைஞராக இருந்த அவரது தந்தை பஞ்சலிங்கமே நடிப்பின் மீதான ஆசை துளிர் விடக் காரணமாக இருந்தார். ஆரம்ப காலங்களில் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களில் நடித்து வந்த வரகுணன், 2006 இல் ஊடகத்துறைக்குள் கால் பதித்தார். 2009இல் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் வரகுணனையும் புலம்பெயர வைத்தது. அவருடன் சேர்ந்து நடிப்பின் மீதிருந்த காதலும் புலம்பெயர்ந்து கொண்டது. தற்போது பல ஆங்கிலப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் வரகுணனை எதிரொலிக்காக நேர்கண்டோம்.

**கேள்வி:- புலம்பெயர்வுக்குப் பிறகு லண்டனில் வசிக்கும் நீங்கள் ஆங்கிலத் திரைத் துறையில் குறும்படங்கள், நீள்படங்கள், விளம்பரங்கள் என தொடர்ச்சியாக நடித்து வருகின்றீர்கள். இதுவரை உங்கள் நடிப்பில் வெளி வந்த படங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

பதில்:- smooth demon production தயாரிப்பில்; சொனி மைக்கல் லோசன் (sonny michael chochan) இயக்கத்தில் பேஷண்ட் 52 (patient 52) ருத்லெஸ் (ruthless ) என்னும் 2 படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவை அண்மையில் வெளி வந்து மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

மேலும், எல்சி பிக்ஸரின் (elsy pictures) தயாரிப்பில் லெவிஸ் கிளெமென்ட்ஸ் (lewis clements) இயக்கத்தில் மை பாதர் (my father) என்ற நகைச்சுவைக் குறும்படம் ஜனவரி மாதம் வெளிவரவுள்ளது. அதை விட லண்டனில் உள்ள பிரபல தொலைக் காட்சியான ஐ ரிவியில் விளம்பரங்களிலும் நடித்து வருகின்றேன்.

tiger down ltd என்ற முழுநீளப்படத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றேன்.

**கேள்வி :- தமிழ் சினிமாவைத் தவிர்த்து ஆங்கில சினிமாவை நீங்கள் தேர்ந்தெடுத்தது ஏன்?**

பதில்:- தமிழ் சினிமாவை ஒருபோதும் நான் தவிர்க்கவில்லை. அதற்கான களம், வாய்ப்புகள் அமையவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆங்கில சினிமாவில் தான் நடிப்பேன் என்ற விடாப்பிடியான எண்ணங்கள் எதுவுமே எனக்கு இருந்ததில்லை. ஆங்கில சினிமாவில் களம் இருந்தது. வாய்ப்புகளைத் தீவிரமாகத் தேடினேன். என்னுடைய தீவிரமான முயற்சியின் பலன் தான் இப்போது நடிகனாக அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. அதன் வழியே பயணித்துக் கொண்டிருக்கின்றேன். தமிழ் சினிமாவிலும் அவ்வாறான வாய்ப்புகள் வந்தால் கண்டிப்பாக நடிப்பேன். தாய் மொழியில் நடிப்பதற்காக ஆர்வமாகவே இருக்கின்றேன்.

**கேள்வி :-ஈழம் மற்றும் புலம்பெயர் நாடுகள் என எதை எடுத்துக்கொண்டாலும் எமக்கென தனித்துவமான சினிமா இல்லை என்று கூறப்படுகின்றது. ஆங்காங்கே ஒரு சில முயற்சிகள் நிகழ்ந்தாலும் ஒருவித வெற்றிடம், போதாமையே நிலவுகிறது. இது குறித்து?**

பதில்:- இதற்குப் பல காரணங்கள் உள்ளன. நல்ல சினிமாவை எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள கலைஞர்கள் பலர் எம்மத்தியில் உள்ளனர். ஆனால் அவர்களை நம்பி முதலிடுவதற்கு யாரும் தயாராக இல்லை. பல கதைக்களங்களைக் கொண்ட எம் தேசத்தில், குறைந்த முதலீட்டில் நல்ல சினிமாவை எடுக்க முடியும். இந்த நம்பிக்கையும் கொஞ்சம் அர்ப்பணிப்பு உணர்வும் தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்டால் மட்டுமே எமக்கென தனித்துவமான சினிமாவை உருவாக்க முடியும். இவற்றுக்கப்பால் முழுநேரத் தொழிலாக சினிமாத் துறை எம்மத்தியில் வளரவில்லை. அந்த நிலை ஏற்பட சில காலங்கள் எடுக்கலாம். அதுவரை கடினமான பாதையில் பயணித்தால் மட்டுமே தனித்துவமான சினிமா என்ற நிலையை அடைய முடியும்.

**கேள்வி :- மாறுபட்ட மொழிகள், கலாசாரம், மனிதர்கள் இருக்கும் சூழலில் உங்கள் தாய் மொழியல்லாத சினிமாத் துறையில் பயணிக்கின்றீர்கள். இதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றீர்கள்?**

பதில் :- ஆமாம். நீங்கள் குறிப்பிடுவது போல பல சவால்களை எதிர்கொண்டேன். ஆரம்ப நாட்களில் நடிகன் என்ற எவ்வித அடைமொழியும் இல்லாமல், நடிப்பு என்ற ஒன்றை மட்டும் நம்பிக் கொண்டு பல சினிமா கம்பனிகளுக்கு ஏறி இறங்கினேன். அப்போதெல்லாம் என்னை அறிமுகப்படுத்தவே போராட வேண்டியிருந்தது. நிறம் மற்றும் இனத்துவேசத்தை அதிகமாக எதிர் கொண்டேன். ஆனாலும் நான் தோல்வியை ஒத்துக் கொள்ளவில்லை. நடிக்க வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருந்தேன். கடுமையாகப் போராடினேன். இப்போது எனக்கென ஓர் அடையாளத்தை உருவாக்கிக் கொண்டேன்.

**கேள்வி :- ஈழத்துக் கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றும் திட்டங்கள் எதுவும் உண்டா?**

பதில் :- கண்டிப்பாக. ஈழம் எனது தாய் வீடு. இங்குள்ள கலைஞர்கள் என் உறவுகள். என்னுடைய உறவுகளுடன் இணைந்து என் தாய்வீட்டுக் களத்தில் ஒரு சினிமாவை எடுக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசை. அது பற்றி நிறையவே திட்டமிட்டுள்ளேன். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருக்கின்றேன். ■


# Blinds Screens Security Doors

*Factory Direct*



Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans

OUR SERVICES : • PLANTATION SHUTTERS • TIMBER BLINDS • SCREEN BLINDS • VERTICAL BLINDS • ROLLER BLINDS • ROMAN BLINDS • SECURITY DOORS ( All Types) • FLY SCREENS • WARDROBE DOORS • CANVAS AWNINGS • SPLASH BACKS • MIRRORS

Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770

Email: galalxyoz@bigpond.com

GalaxyOZ (PVT) Ltd. Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061

# 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆஸ்திரேலியாவில் அறிமுகமாகும் மாற்றங்கள்!

2019 ஆம் ஆண்டு பல விநோதங்களுடன் விடிந்திக்கின்றது. உலகம் பல மாற்றங்களுக்காக காத்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவிலும் பல அரசியல் - இராஜதந்திர - சமூக மாற்றங்கள் இடம்பெறவிருப்பதை கடந்த ஆண்டின் கடைக்கூறுகள் கட்டியம் கூறியிருந்தன. அந்த வகையில் 2019 இல் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டிய சில மாற்றங்களை இங்கே கவனப்படுத்தவிருக்கிறோம். 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்ற இந்த மாற்றங்கள் வருமாறு -

1) பெண்கள் மாதவிடாய் காலப்பகுதியில் பயன்படுத்தும் உள்ளங்கிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு இந்த விடயம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தபோதும் பல்வேறு பிரதிவாதங்களுக்கு உட்பட்டு இழுபட்டது. தற்போது அதற்கான ஏகமனதான அங்கீகாரம் கிடைத்திருப்பதையடுத்து, 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இந்த விவகாரத்துக்குப் பயன் கிட்டியுள்ளது. இதன் அர்த்தம், பெண்களது மாதவிடாய் உள்ளங்கிகளின் விலை இனிமேல் பத்து சத வீதத்தினால் குறைவடையும்.

2) NAB ATM இயந்திரங்களின் இனிமேல் வேறு வங்கி வாடிக்கையாளர்கள் பணம் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு டொலர்கள் அறவிடப்படும் என்று NAB அறிவித்துள்ளது. CommBank, NAB, ANZ ,Westpac ஆகிய வங்கிகள் தாங்கள் தமது வாடிக்கையாளர்களிடம் இத்தகைய அறவீட்டினை மேற்கொள்ளப் போவதில்லை என்று கடந்த செப்ரெம்பரில் அறிவித்துள்ளபோதும் தமது வங்கி இந்த விடயத்தில் ஏனைய வங்கிகளுடன் ஒத்துப்போகப்போவதில்லை என்று NAB தற்போது அறிவித்துள்ளது.

NAB தாங்கள் இந்த பணத்தை அறவீடு செய்வதற்கான காரணத்தை விளக்கும்போது - கடந்த ஐந்து வருடங்களில்ATM இயந்திரங்களின்வழியாகவாடிக்கையாளர்கள் பணம் பெறுகின்றமுறையானது 20 சத வீதத்தினால் குறைவடைந்திருக்கிறது என்றும் ஆக, எதிர்வரும் காலங்களின் அட்டைகளின் வழியான மற்றும் வங்கி வழியான பணப்பரிமாற்றங்களுக்கான வாய்ப்புக்களேஅதிகம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆகவே, முதலாம் திகதியிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு இந்த இரண்டு டொலர் அறவீடு காத்திருக்கிறது.

3) நோய்த் தடுப்பு ஊசி போடாத குழந்தைகளை குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் மற்றும் முன் பள்ளிகளில் இணைத்துக்கொள்வதில்லை. இவ்வாறு நோய்த்தடுப்பு ஊசி போடாத குழந்தைகளின் பெற்றோருக்கு ஆயிரம் டொலர்கள் வரை தண்டப்பணம் அறவிடுவது என்ற நடைமுறையை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மேற்கு ஆஸ்திரேலிய மாநிலமும் பின்பற்றவுள்ளது. ஏற்கனவே இந்த நடைமுறையை விக்டோரியாவும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலங்கள் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளுக்கான தடுப்பு ஊசிகளை நேர காலத்துக்கு போடுவதற்கான இறுக்குமான கட்டுப்பாடுகளை பெற்றோரின் மீது விதிப்பதற்காகவும் வளமான சந்ததியை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் இந்த நடைமுறையை கைக்கொள்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை அறிவித்தன் பிரகாரம், கடந்த ஜூலை மாதத்துக்கும் நவம்பர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 80 ஆயிரம் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் இந்த இறுக்கமான கட்டுப்பாடு தொடருமானால் குழந்தைகளின் ஆரோக்கியம்தான் வளம்படும் என்று மாநில சுகாதார திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.

4) சில பொருட்களின் விலைகளில் குறைப்பையும் வரி விலக்கினையும் அறிவித்தாலும் இன்னும் சில அத்தியாவசிய சேவைகளின் விலைகளில் அரசு நாசூக்காக கை வைத்திருக்கிறது. அதாவது, விக்டோரியா மற்றும் பிறிஸ்பன் மாநிலங்களில் பொதுமக்கள் போக்குவரத்து கட்டணங்களில் சில கசப்பான மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. இந்தமாற்றங்கள்முதலாம் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில்;

விக்டோரியாவில் -

- Two hour, full-fare tickets will increase from $4.30 to $4.40.
- All-day tickets will increase from $8.60 to $8.80.
- Seven-day, full-fare Myki passes will increase from $43 to $44.
- Annual full-fare Myki pass will increase from $1683.50 to $1,722.50

பிறிஸ்பேர்ணில் -

- Adult, single-zone ticket will increase from $4.70 to $4.80 (no change to concession).
- Eight-zone tickets will increase from $28.40 to $28.90 for adults and from $14.20 to$14.50 for concession.
- TransLink Go card costs will increase for single-zone travel from $2.60-$3.25 to $2.65-$3.31 (adults) and $1.30-$1.63 to $1.32-$1.66 (concession).
- Maximum eight-zone fare will increase from $15.69-$19.61 to $15.97-$19.96 (adults) and $7.84-$9.81 to $7.98-$9.98 (concession).

5) குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 300 டொலர்கள் பெறுமதியான பொதியொன்று வழங்கும் நடைமுறையை நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு இந்த வருடம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கிறது. இந்த 300 டொலர் பொதியில் குழந்தைக்கும் தாயுக்கும் தேவையான அத்தியாவசிய பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். வீட்டில் குழந்தையைப் பெற்றுக்கொள்பவர்கள் தங்களது விவரங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொண்டாலோ அல்லாது பெற்றோர் இடாப்பில் தங்களது பெயர்களை பின்னர் பதிவு செய்து கொண்டாலோ குறிப்பிட்ட முகவரிக்கு இந்த பொதி அனுப்பி வைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

6) ஒரு மணிநேரத்துக்கும் அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கும் வாகனத்தரிப்புக்கு பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்பவர்களுக்கு தரிப்புக்காலப்பகுதிக்கான நேரம் முடிவடைந்த பின்னரும் 10 நிமிடங்களை மேலதிகமாக வழங்குவதற்கு நியூ சவுத் வேல்ஸ் கவுன்ஸில்கள் முடிவுசெய்துள்ளன.

அந்தப் பத்து நிமிடங்களுக்குள்ளேயும் அந்த பற்றுச்சீட்டைப் புதுப்பிப்பதற்கு தவறின் அல்லது வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு தவறினால், வழக்கம் போல தண்டப்பணத்தை அறவிடுவதற்கு சோதனை அதிகாரிகளை பணிப்பதற்கு கவுன்ஸில்கள் தீர்மானித்துள்ளது. இது நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் மாத்திரம் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

7) குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வருடமொன்றுக்கு 10 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை வழங்குவதற்கு நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு முடிவுசெய்துள்ளது. இதுவரை காலமும், இந்தக்காரணத்துக்காக, வருடமொன்றுக்கு ஐந்து நாட்கள் மாத்திரம் சம்பளத்துடன்கூடிய விடுப்பினை வழங்கி வந்த மாநில அரசு, இந்த வருடம் முதல் பத்து நாட்கள் என்ற மாற்றத்தை கொண்டுவருகிறது. இது அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ஆகும்.




# துரித உணவுப் பழக்கமும் மலச்சிக்கலை ஏற்படுத்தும்

கேள்வி : நோய் வரும் முன் நம்மை பாதுகாத்துக்கொள்வது எப்படி? சித்த மருத்துவத்தில் Pre-rvertire Medicine உள்ளதா?

**சுரேஷ், பிரிஸ்பேர்ண்.**

பதில் : சித்த மருத்துவம் தோன்றியதே வரும்முன்காத்தலை அடிப்படையாகக் கொண்டது தான். பிறந்த குழந்தையில் ஆரம்பித்து வயதான கிழவர்கள் வரை உள்ள அனைத்து வயதினர்க்கும் உண்டாகக் கூடிய நோய்களைத் தடுத்து நீண்ட வருடங்கள் வாழ்வதற்கான காயகற்ப முறைகளை தமது ஓலைச் சுவடிகளில் குறிப்பிட்டுள்ளனர்.

அதில் முக்கியமாக 6 மாதக் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் உரை மாத்திரை அல்லது உரை மருந்து மிகச் சிறந்த முறையில் நோய் எதிர்ப்பாற்றலை உண்டாக்கி ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகை செய்யும்.

இதேபோல கோலை ஊன்றி நடக்கும் வயதானவர்கள்,

'காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ணில்
கோலை ஊன்றிக் குலுங்கி நடப்பவர்
குமரனாகி குலாவத் துடிப்பனே!'

இதன் பொருளுரை என்னவென்றால், காலை உணவுக்கு பின் இஞ்சி கஷாயம் அல்லது இஞ்சித் தேனூரல் இவற்றைச் சாப்பிட அதில் உள்ள Gingenl நாள் முழுவதும் நோய் தாக்காதவாறு உடலைப் பாதுகாக்கும்.

மத்தியான நேரத்தில் சுக்குப் பொடி சிறிது கலந்து உணவு செரிமானத்தீயை அதிகப்படுத்தி ஆரோக்கிய வாழ்வுக்கு வகை செய்யும்.

மாலை நேரத்தில் உறங்குவதற்கு முன் கடுக்காய்ப் பொடி அதில் உள்ள Chebulin நரம்புகளுக்கு ஊட்டத்தைக் கொடுத்து செரித்த உணவு அடுத்த நாள் காலை சிரமமில்லாமல் வெளியேற உதவும்.

அதுபோல ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டால் நீண்ட காலம் வாழலாம். இது போல எண்ணற்ற பாடல்கள் உடல்நலத்துக்கானகுறிப்புகளை எழுதி வைத்துள்ளன.

கேள்வி : மலச்சிக்கல் எனக்கு அடிக்கடி உண்டாகிறது. வேலையின் காரணமாக துரித உணவு-களே என்னுடைய உணவுப் பட்டியலை நிரப்புகிறது. என்ன செய்யலாம் டாக்டர்?

**ரோஹித், சிட்டி**

பதில்: தினமும் துரித உணவுகளைச் சாப்பிடுபவர்கள் மலச்சிக்கலால் தவிப்பது தடுக்க இயலாது. மைதா சேர்ந்த உணவுகள், மசாலா நிறைந்த அசைவ உணவுகள், தேவையான அளவு தண்ணீர் குடிக்காமை போன்றவை குடல் இயக்கங்களைத் தடுத்து மலச்சிக்கலை உண்டாக்கும்.



நார்ச்சத்துள்ள உணவுகளான கீரைகள், பழங்கள், பயறு வகைகள், முழு தானியங்கள் உடலுக்குத் தேவை. வெந்தயம் மிகச் சிறந்த மலமிளக்கி. 100 கிராம் வெந்தயத்தில் 65 வீதம் நார்ச்சத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

குடலுக்கு நன்மை செய்யக் கூடிய Probiotic கூறுகள் நிறைந்த மோர் மிகச்சிறந்த உணவு. மேலும் குளிர்பானங்கள் எப்பொழுதும் அருந்தக் கூடாது.

மலச்சிக்கல் பிரச்சினை தொடர்ந்து நீடித்தால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது மிக அவசியம். ■

20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது
உலகத்தமிழரின் உரிமைத் தோழன்
இன்பத்தமிழ் ஒலி
24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை
Mobile App
TUNE IN
Inbathamil
www
inbathamil.com


Inbathamil Studio
2/251 Liverpool road,
Ashfield - NSW2131,
Australia
02-9798 2993
02-8542 2016
0451 051 767
0425 324 953
inbathamil@gmail.com
inbathamiloli


MATHY FOOD CORNER
Restaurant & Bakery
MATHY FOOD CORNER
RESTAURANT & BAKERY
Experience the taste
of Sri lankan & Indian Food
KOTHU OFFER
3 pm $ 05.00
SUNDAY BUFFET
11am to 3pm $ 14.99
DAILY LUNCH
Monday to Friday
12 to 2 pm $ 05.00
FRIDAY SPECIAL
Village Style Lunch
(Thali) on Banana Leaf
with 7-8 Vege Curries
with Rice
$ 8.00
THURSDAY SPECIAL
Kothu
Choice of Lamb
Chicken
Veg / Egg $ 5.00
Cake Orders will
be Undertaken...
Special orders will
be Undertaken...
Birthday
Wedding
Anniversary
Parties
& Special Occasions..
1/24 Langhorne Street,
Dandenong VIC 3175, Australia.
Tel: +61 3 8753 5751
www.mathyfoodcorner.com.au
facebook
www.facebook.com/mathyfoodcorner

**ஆஸ்திரேலிய கதைக்களத்தோடு வெளியாகும் எதிரொலியின் இம்முறை சிறுகதையை எழுதியிருப்பவர் சொலமன் யோகநாதன். யாழ். பல்லைக்கழகப் பட்டதாரி. முதலில் மெல்பேர்னுக்கு குடிபெயர்ந்து வந்தவர் தற்போது கன்பராவில் வசிக்கிறார். சிறுகதைகளைவிட நாடகங்களில் அதிகம் நாட்டமுள்ளவர். பல்லைக்கழக காலங்களிலேயே "மண் சுமந்த மேனியர்" போன்ற நாடகங்களில் தீவிரமாகச் செயற்பட்டவர். இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். நிறைந்த வாசிப்பு பழக்கம் உடையவர். சிற்றிதழ்களில் தனது ஆக்கங்களை கொண்டுவருவதில் இப்போதெல்லாம் அதிக ஈடுபாடில்லாமல், நாடகங்கள், தமிழ் பாடசாலை பணிகள் ஆகியவற்றில் தன்னை அதிகம் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார். அவரை பேருவகையுடன் எதிரொலியின் சிறுகதைப்பகுதிக்கு அழைத்து வந்ததில் நிறைவடைகிறோம். அவரது 'உஷார் மடையன்" என்ற இந்தச் சிறுகதை ஆஸ்திரேலியாவை தாண்டியும் பெரியளவில் பேசப்படும் என்று திடமாக நம்புகிறோம். செறிவான கதை, அழகான உரைநடை, தெளிவான கருத்து என்று சிறுகதையின் அத்தனை நுணுக்கங்களையும் லாவகமாக உஷார் மடையனில் கொண்டுவந்திருக்கிறார் யோகநாதன். படித்துப்பாருங்கள்.**



# உஷார் மடையன்



மொபைல் கிணு கிணுத்தது. நேசன்தான்.

தெருவில் எங்கோ நின்று கொண்டு வீட்டு நம்பர் கேட்டான். தனபால் சொன்னார். அவன் அவரின் வீட்டுக்கு வருவது இதுதான் முதல் தரம்.

பிறகு இரு நிமிடம் கழித்து

"வெள்ளை வான் வைச்சிருக்கிறீங்களோ?" என்றான்.

"என்ன?" குரலை உயர்த்திக் கேட்டார் தனபால்.

"வெளியிலை நிக்கு. உங்கடை வீடுதானோ எண்டு கொன் போம் பண்ணக் கேட்டன்.

இரவில் வீட்டு நம்பர் பிடிப்பது கஷ்டம்"

யன்னல்திரைக்குள்ளால் வெளியே எட்டிப் பார்த்தால் அயலிலுள்ள யாரோ பாவி அவரின் வீட்டுக்கு முன்னால் வெள்ளை வானொன்றைப் 'பார்க்' பண்ணியிருந்தான்.

"எங்கடை வீடுதான் வா" – என்றார் தனபால்.

வின்ரர் இருட்டு மெல்லிய கரும்புகை படர்வது போல மூடிக் கொண்டு வருகிறது.

கதவைத் திறக்காமலேயே வீட்டின் முகப்பு விளக்கு வெளிச்சத்தில் நேசனின் உருவம் கதவோடு ஒட்டியிருந்த கண்ணாடியூடே தெரியும் வரை காத்திருந்தார். வெளியே தெருவோரம் நின்ற உயர்ந்த சைப்ரஸ் மரங்கள் சுழன்றடிக்கும் காற்றுக்கு வளைந்து மீள்வதும் கண்ணாடி ஊடே தெரிந்தது.

திருமணத்துக்குப் பிறகு நேசனை தனபால் சந்திக்கவில்லை. அவன் மனைவியையும் அவருக்குத் தெரியாது. கொழும்பில் நடந்த திருமணத்துக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தான். அவர் போகவில்லை. போகவேண்டுமென்றில்லை. அது சம்பிரதாயமான அழைப்பிதழ்தான்.

நேசன் அவருக்கு சொந்தக்காரனுமில்லை, நண்பனுமில்லை. அதைவிட அவனுக்கு அவரிலும் இருபத்தைந்து வயது குறைவு. அவனை அவருக்கு இங்கே தெரிய வந்ததுக்கு ஒரே காரணம் தனபால் ஊரில் படித்த மகா வித்தியாலயத்தில்தான் சிவகடாட்சமும் படித்தார். சிவகடாட்சத்தின் ஒரே மகன் சிவநேசன், இங்கே நேசன் என்று சுருங்கி இருந்தான்.

இன்றைக்கு இரவு வீட்டுக்கு வரலாமோ என்று நேசன் மொபைலில் கேட்டபோது,

கலியாணகாட் ஒன்று வாங்கி அதில் காசை வைத்துக் கொடுத்து விடுவோம் என்றிருந்தார்.தம்பதிகள் முதன் முதலாக வீட்டுக்கு வருகிறார்களென்பதால் அவர் சுருக்கமாக 'சந்திரி' என்றழைக்கும் மனைவி சந்திரிகா சமையலறையில் ஏதோ சாப்பாடு தயாரிக்கத் தொடங்கிவிட்டாள்.

நேசன் கதவு மணியை அழுத்த முன்பே கதவைத் திறந்தார் தனபால். இதுதான் தருணமென்று குளிர் காற்று அவனை முந்திக் கொண்டு நுழைந்தது.

தனியாகவே வந்தான்.

"எங்கை மனிஷியை கூட்டி வராமல் நீ தனியா?"

"அதுக்கெல்லாம் இப்ப அவசியமில்லை. எனக்கு அவசரமா ஒரு உதவி தேவை" – என்று சொல்லிக்கொண்டே குனிந்து சப்பாத்தைக் கழற்றினான். எப்போதும் பதற்றத்துடனிருப்பது அவன் பிறப்பியல்பு.

நேசன் கதைப்பதும் கரடு முரடாகவே இருக்கும். தனபாலை விட வயது குறைந்தவனென்றாலும் அவன் பேச்சு வழக்கு அப்பிடி. அது தகப்பன் வழி வந்திருக்க வேண்டும்.

இப்பிடித்தான் போன வருஷக் கடைசியில் – "அவசரமா உங்கடை உதவி ஒண்டு தேவை" – என்று போன் பண்ணி, தேனிலவுக்கு போக எது நல்ல இடம் எண்டு தனபாலிடம் கேட்டான்.

"வயதுக்கு மரியாதை இல்லாமல் இதையா கேட்பான்" – என்றாள் சந்திரி.

தனபாலுக்கு ஜெர்விஸ் குடாக் கடலையும் அதை சுற்றியுள்ள சுற்றுலா விடுதிகளையும் நன்றாகத் தெரியும் என்பது நேசனுக்குத் தெரியும். அப்பகுதியில் இருந்த விமானப் படைத் தளம் ஒன்றில்தான் பன்னிரண்டு ஆண்டுகள் தனபால் வானூர்திப் பொறியியலாளராக வேலை செய்து இப்போது ஓய்வு பெற்றுவிட்டார். அவருக்குத் தெரிந்த ஒரு கடற்கரை விடுதியின் விபரங்களைக் கொடுத்தார். அது நேசனின் திருமணத்துக்கு ஏழு மாதம் முன்பு.

வரவேற்பறைக்குள் நுழைந்தவன் குளிருக்குப் போடும் ஜாக்கற்றைக் கழற்றி வைத்து விட்டு –

"அனாமிகா எனக்கு ஒத்து வரமாட்டாள். டிவோர்ஸுக்குத் தான் இப்ப வழி பாக்கிறன்" – என்றான்.

இப்போ சமையலறையில் சத்தம் நின்றது. சந்திரி அவசரமாக வெளியே வரவேற்பறைக்குள் வந்தாள் .

திருமணம் முடித்து முதல் முதலாக வரும்போதே இப்படி ஒரு ட்ராமாவுடன் வருவான் என்று தனபாலும், சந்திரியும் எதிர்பார்க்கவில்லை.

"நீதான் தேனிலவுக்கெல்லாம் போய் வந்தாய் என்ன நடந்தது?"

நேசன் திருமணம் நிச்சயமாக முன்னமே தனபாலிடம் தேனிலவு போவதற்கு எது நல்ல இடங்கள் என்று கேட்டபோதே இவன் ஒரு "உஷார் மடையன்" என்று சந்திரி சொன்னாள்.

இதென்ன உஷார் மடையன் என்று நீங்கள் கேட்பீர்கள்.

இந்தச் சொல்லை யார் கண்டுபிடித்தார்கள் என்று தெரியவில்லை. அதீத உற்சாகத்தில் முட்டாள்தனமான வேலைகளைச் செய்பவனே உஷார் மடையன் என்பது சந்திரியின் வியாக்கியானம்.

இன்டர்நெட் மூலம் ஒரு பெண்ணுடன் பேஸ்புக்கில் அறிமுகமாகிவிட்டு சில வருடங்களாவது பழகிப் பார்க்க முன்னரே திருமணம், தேனிலவு என்று அவரசக் குடுக்கை மாதிரி நேசன் நடந்து கொள்வதைத்தான் சந்திரி கிண்டலாக அப்போது சொன்னாள். அது உண்மையாகி விட்டதோ?

என்ன நடந்தது என்ற தனபாலுடைய கேள்விக்கு பதில் சொல்லுமுன், நேசன் பிளாஷ் பாக்கில் கடற்கரைச் சம்பவத்தை நினைவில் ஓடவிட்டான்.

ஜெர்விஸ் குடாக்கடலின் பவுடர் போல வெண்மணற் கரையுடைய அழகிய கடல் அது.

நெஞ்சளவு தண்ணீரில் நின்று குனிந்து பார்த்தாலும் கீழே வெண்மணல் தெரியுமளவுக்கு நல்ல சுத்தமான கடல். நல்ல வெயிலில் அந்த மண்ணில் மெல்லலைகள் போடும் ஒளிக் கோலங்கள் பல்லாயிரம் பல்கோணிகளாகத் தெரியும்.

மதியம் நேசனும் அனாமிகாவும் கடலில் இறங்கியிருந்தனர்.

அன்று பௌர்ணமி ஆதலால் மதியத்திலிருந்தே அலைகள் வீறு கொண்டெழுந்து வந்து விழுந்து கொண்டிருந்தன.

"நாகம் ஒன்று படம் விரித்து குனிந்து கொத்துவதைப்போல பேரலைகள் எழுந்து வளைந்து வந்து கரையில் விழுகின்றன" – என்று என்று அலைகளைப் பார்த்துச் சொன்னாள் அனாமிகா.

"வயிற்றை எக்கி உள்ளிழுத்து வாந்தி எடுப்பவன் போல அலைகள் நுரையைக் கக்குகின்றன" – என்று கடலலைகளைக் கறாராக வர்ணித்தான் நேசன்.

நேசனைப்பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டாள் அவள். இப்படிப்பல முகச்சுளிப்புகள் அவ்வப்போது வந்து போயின.

எல்லாவற்றிருக்கும் சிகரம் வைத்தாற் போல அன்றிரவு நிகழ்வு ஒன்று களம் அமைத்தது.

கடல் வாந்தி எடுத்தாற்போல என்று சொன்னவன் உண்மையாகவே அன்றிரவு வாந்தி எடுத்ததுதான் எல்லாத்துக்கும் காரணம்.

கூல் பியரை எடுத்து பிரிஜ்ஜுக்குள் வைத்துவிட்டு தான் அல்கஹோலுக்கு பரிச்சயமானவன் என்பதைக்காட்டிவிடுவதற்கு இதைத்தவிர நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று எண்ணினான் நேசன்.

திருமணம் கொழும்பில் பெண் வீட்டார் கட்டாயத்தின் பேரில் கோயிலும், சைவச்சாப்பாடுடனும் என்று முடிந்துவிட்டது.

இரவு ஒரு பியரில் வாய் நனைத்ததற்கே சத்தம் போட்டாள் அனாமிகா. வீம்புடன் போத்திலைக் குப்பைக்கூடைக்குள் போட்டு விட்டுப் படுத்தவன் அனாமிகா நித்திரையானதும் கீழே பாருக்குப் போய் நான்கு பெக் ஸ்கொட்ச் விழுங்கி விட்டுத்தான் படுத்தான்.

பியரும்,ஸ்கொச்சும் இரவெல்லாம் வயிற்றுக்குள் இரசாயனத் தாக்கத்திலீடுபட்டு நேசன் காலை எழும்பும்போதே அது வாந்தியாக வந்தது. பற்றிக்கொண்டு வந்தது அனாமிகாவுக்கு. இப்படித்தான் பிரச்சினைகள் சிறிது, சிறிதாக முளைக்கத் தொடங்கின.

சில செக்கன் பிளாஷ் பாக்கிலிருந்து மீண்ட நேசன் நடந்ததை தனபாலுக்குச் சொல்லாமல்.

"இப்ப இதைக் கேளுங்கோ சொல்லுறன்." – என்றவாறு தனது மொபைலில் "சவுண்ட் ட்றக்" ஒன்றை அழுத்தினான்.

அதில் அனாமிகாவும், நேசனும் சண்டை போடுவது பதிவு செய்யப்பட்டிருந்தது.

(27ஆம் பக்கம் பார்க்க)

# உஷார் மடையன்

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

டீவியில் சீரியல் நாடகங்களில் இந்த வகையறா சண்டைக ளைப் பலதடவை பார்த்திருக்கிறார் தனபால். ஆனால்,சண்டையை சத்தமாக மட்டும் கேட்டது இதுதான் முதல் தடவை. தான் சண்டை பிடிக்கும் போதே அதை ஒலிப்பதிவு செய்யும் மூளை இவனுக்கு எப்பிடி வந்திருக்கும்? எந்த மீடியாக்காரனுக்குக்கூட இந்த ஐடியா வந்திராது.

இப்போது அவனது கோரிக்கை என்ன என்று கேட்டால் –

இந்தச்சண்டையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவரு டைய குரலில் பதிவு செய்து தரமுடியுமா என்றான்.

அந்த ஒலிப்பதிவைக் காட்டி குடும்ப நீதிமன்றத்தில் விவா கரத்துப் போடமுடியுமாம்.

தனபால் பகுதி நேரத் தொழிலாக மொழிபெயர்ப்பு செய்பவர் என்று யாரோ சொல்லியிருக்க வேண்டும்.

தமிழ்ச் சண்டையை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம் ஆனால் தமிழ் சத்தத்தை எப்பிடி மொழி பெயர்க்கிறது ?

அதுவும் அனாமிகா சண்டையின் இடையில் அவ்வப்போது போட்ட குக்குபரோவின் அலறலை ஒத்த சத்தத்தை, அல்லது மரப்பெட்டியை கொங்கிறீட் தரையில் இழுக்குமாப் போல போட்ட சத்தத்தை என்ன செய்வது என்றார் தனபால்.

நேசன் விடாப்பிடியாக நின்றான்.

யாரேனும் உதவி கேட்டால், மாட்டேன் என்று உடனே சொல்ல வராத ஒரு கெட்ட குணம் தனபாலுக்கு. அல்லது ஏதாவது சாட்டு சொல்லி கடத்திவிட நறுக்காக நாலு சொல்லில் ஒரு பொய் சொல்லும் புத்தியும் இல்லை.

இந்த விஷயங்களில் சந்திரி ஒரு சூரி.

எல்லாவற்றையும் உள்ளிருந்தே கேட்டுக் கொண்டிருந்த சந்திரி, நேசன் இருந்த கதிரைக்குப் பின்னாலிருந்து வேண்டாம் என்று கோபத்துடன் தலையாட்டி தனபாலை முகத்தால் எச்சரித் தாள்.

தேநீரை எடுத்து வரும் சாக்கில் தனபால் எழுந்து உள்ளே போக –

"சின்னப்ப பிள்ளையள் மண் வீடு கட்டி உடைச்சு கட்டுற மாதிரியா இது ?"

"இதெல்லாம் இங்க சாதாரணம். உண்மையான வீட்டையே இஞ்சை இடிச்சு திரும்பிக் கட்டலாம்."

"கும்பத்தைப் பிரிக்கின்ற வேலையை செய்து போடாதை யுங்கோ. எங்களுக்குத்தான் பழி பாவமெல்லாம் வரும்"

"அப்ப என்ன செய்ய?"

"ஒண்டும் செய்ய வேண்டாம். என்ரை இங்கிலீஷ் சரி யில்லை. பிரெண்டிட்ட கேட்டு சொல்லுறன் எண்டு இப்ப சொல் லுங்கோ. ஆனா ஒருத்தரிடடையும் கேக்க வேண்டாம்".

கிச்சனிலிருந்து திரும்பி வரவேற்பறைக்கு வரும்போதுதான் டைனிங் மேசையில் வைத்திருந்த கலியாண காட் கண்ணில் பட்டது. கொடுப்பதா என்று சைகையால் சந்திரியிடம் கேட்டார் தனபால்.

"வேண்டாம்" என்று சைகையால் சொன்னாள் சந்திரி.

"மூளை இல்லையா உங்களுக்கு" – என்று அதையும் சைகை யால் கேட்டாள்.

தனபால் வெளியே வரவேற்பறைக்கு வர ஓரளவுக்கு நிலை மையை விளங்கிக் கொண்டதனாலேயோ என்னவோ –

"உங்களுக்கு கஷ்டமெண்டால் வேற யாராவது தெரிஞ்ச ஆட்கள் இருந்தாலும் சொல்லுங்கோ" – என்றான் நேசன்.

"வேறு யாரிடமாவது விசாரித்துப் பார்க்கிறேன்" – என்றார் தனபால்.

அதுக்குப் பிறகு இரண்டு மூன்று முறை நேசன் அவருக்கு மொபைல் அடித்தான். அதில் விழுந்த அவனது நம்பரைப் பார்த்து போனை எடுக்காமல் விட்டார் தனபால்.

பிறகு நேசன் அவருக்குப் போன் எடுப்பதை நிறுத்தி விட்டான்.

தனபாலுக்கு அவனை நேரில் சந்திக்காமல் தவிர்த்துவிடுவது சுலபம்.

காரணம் அவன் இருந்த இடத்துக்கும் தனபால் வீட்டுக்கும் குறைந்தது ஒரு அறுபது கிலோ மீற்றராவது இருக்கும் . இல்லாவிட்டால் ஷொப்பிங், ரயில் நிலையம், பஸ் ஸ்டான்ட் என்று எதிலாவது அவனுடன் முட்டிக் கொண்டிருந்திருப்பார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புரட்டாசிச்சனியன்று எள் ளெண்ணை எரிக்க இருநூறு கிலோமீற்றருக்கு அப்பாலிருக்கும் வெங்கடேஸ்வரர் கோயிலுக்குத் தனபாலும், சந்திரியும் போயி ருந்தனர்.

உள்ளே நேசனும் மனைவியும் தரையில் அமர்ந்திருந்து ஐயரிடம் தட்டை வாங்கிக் கொண்டிருந்ததை தனபால் கண்டு விட்டார். அன்று குக்குபாரோ சத்தம் போட்டவளா இவள்? வெகு சாந்தமாக பெண் குழந்தையை மடியில் வைத்தபடி நேசனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். ஏதோ விஷேச அர்ச்சனை போலி ருந்தது.

தனபால் அவர்கள் கண்ணில் படாமல் கோயில் பக்கக்கத வால் நழுவி விட நினைத்த அந்த நேரம் பார்த்துத்தான் பெண் குழந்தை தாயின் மடியை விட்டு எழுந்து ஓடி தனபால், சந்திரி யின் பக்கம் வந்தது.

நேசனும் அவளும் பிள்ளையைப் பிடிக்க எழுந்து ஓடி வர இருவ ரையும் தனபாலும், சந்திரியும் தவிர்க்க முடியாதவாறு கண்டு விட்டனர் .

வேட்டியும் குர்தாவும் அணிந்தபடி நேசன். புதுப்பிறவி எடுத்து விட்டானா?

நேசன் மனைவியின் பின்னால் நின்று எதையும் கேட்டு விடவேண்டாமென்று சைகை காட்டித் தலையாட்டினான்.

நிலைமையை உடனே புரிந்து கொண்டு பிள்ளையைத் தூக்கி தாயிடம் கொடுத்து விட்டு–

"அம்மா, அப்பாவை விட்டு ஓடக்கூடாது என்ன? குட் கேர்ள்" – என்று சொல்லியவாறு தனபாலைப் பார்த்து–

"கெதியா வாங்கோ காருக்குள்ளை பிள்ளை தேடப்போகுது" – என்று சொல்லிக்கொண்டே சந்திரி வேகமாக கதவை நோக்கி நடந்தாள். தனபால் பின் தொடர்ந்தார்.

நேசனுக்கு"அப்பாடா" என்றிருந்தது.

தனபாலும், சந்திரியும் கோயிலுக்கு வெளியே வந்துவிட்டனர்.

"அது சரி. சுகநலம் விசாரிக்க முன்னமே ஏன் பேச்சை முறித்துக் கொண்டு போனாய்.? என்றார் தனபால்.

"அது இப்ப வேண்டாம்" – என்றாள் சந்திரி.


"ஏன் ?" – என்றார் தனபால்.

"இந்தப் பெண்தான் அனாமிகா என்று எப்படித் தெரியும்" – என்று சொல்லிக்கொண்டே சந்திரி தனபாலைத் திரும்பி பார்க்காமலே முன்னுக்குப் போய்கொண்டிருந்தாள்.

தனபால் புகையிரதம் மேடைக்கு வருவது போல மெல்ல காரடிக்கு வந்து சேர்ந்தார்.

காருக்குள் அவர்கள் பிள்ளை போல வளர்க்கும் அந்த நாய்குட்டி இருவரையும் கண்ட சந்தோசத்தில் பின் சீற்றிலிருந்து துள்ளியெழுந்து கதவுக் கண்ணாடியில் காலை வைத்து, எட்டிப் பார்த்து வாலாட்டியது.



# புத்தாண்டு பலன்கள்-2019

## பொது பலன்கள்

இந்தப் புத்தாண்டு ராகுவின் நட்சத்திரமான சுவாதியில் ஏகாதசி திதி செவ்வாய்க் கிழமை பிறக்கிறது. இந்த ஆண்டு 13.02.2019 அன்று ராகு கேது பெயர்ச்சியும் 28.10.2019 அன்று குரு பெயர்ச்சியும் ஆகும். 13.03.2019 முதல் 18.05.2019 வரை அதிகாரமாக குரு தனுசு ராசிக்குச் சென்று வக்கிரமாகி 28.10.2019 வரை விருச்சிக ராசியில் அமர்வதும் இந்த ஆண்டு முக்கியமான நிகழ்வாகும்.

கன்னிகா லக்கனத்தில் புத்தாண்டு பிறந்ததால் தொழில் நுட்பம் , கணித ஆராய்ச்சி போன்றன சிறக்கும். கல்வியில் புதிய மறுமலர்ச்சி நடக்கும். விளையாட்டுத் துறையில் புதியவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். ராகு, கேது பெயர்ச்சியில் அயல்நாட்டு வேலை வாய்ப்புகளும் ஆகாய விமானப் பயணங்களும் புதிய ஒப்பந்தங்களும் ஏற்படும். அரசியலில் புதிய மாற்றங்கள் உண்டாகும். போட்டிகளும், பொறாமைக் குணங்களும் அடுத்தவருக்கு இடையூறு செய்யும் மனநிலை உண்டாகும். கடல் கடந்த காதல் வெற்றியை தரும். உறவுகளுக்குள் விரிசல் வரும். கட்டுமான உதிரி பாகங்கள், இரும்பு சாமான்கள் விலை ஏற்றம் உண்டாகும். விவசாய பொருட்களின் விளைச்சல் அதிகரிக்கும். புடவை வியாபாரம், சிகை அலங்காரம், தோல் சம்மந்தமான புதிய மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்பால் புதிய மாற்றம் உண்டாகும். நவீன யுக்திகளை கையாண்டு சிறப்பான வளர்ச்சியை தொழில் துறையில் உருவாக்கும் நிலை உணடாகும். அரசியல் தலைவர்களுக்கு அச்சுறுத்தலால் பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்து கொள்வார்கள். மீன் பிடி துறையில் வளர்ச்சியும், வெளி நாடு ஏற்றுமதியில் ஏற்றமும் உண்டாகும். படித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். மகளிருக்கு வாழ்வில் கூடுதல் வளம் பெறத் தேவையான உதவிகளை அரசாங்கம் செய்து தரும். தேர்தல் களத்தில் போட்டிகள் விறுவிறுப்பாக இருக்கும். தங்கத்தின் விலை ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எரிபொருள் விலையில் ஏற்றம் உண்டாகும். மலைப் பிரதேசங்களில் சில இடங்களில் மண்சரிவு உண்டாகும். உயிர் சேதம் இருக்காது. அதிகமான பனிமூட்டம் இருக்கும்.நீர் நிலைகளில் தண்ணீர் நிறைந்து இருக்கும். அண்டை நாட்டு நட்புறவு நாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் புதிய வரிகளைக் கையாளும். மொத்தத்தில் இந்த ஆங்கில ஆண்டு மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

கணித்தவர்
வாடிப்பட்டி சு. ஆனந்தன்
91-9789341554

## மேடம்



வாழ்வை மேம்படுத்தி தேவை உணர்ந்து செயற்படும் மேடராசியினரே! இந்த ஆண்டில் புத்துணர்ச்சியும் புதுப் பொலிவும் பெற்றுத் திகழ்வீர்கள்.ஆங்கிலப் புத்தாண்டு செவ்வாய்கிழமை பிறக்கிறது. இது உங்களின் ராசிநாதன் என்பதால் உங்களுக்கு சிறப்பான பலன்கள் உண்டாகும். இந்த ஆண்டு குரு அதிகாரம் பெற்று தனுசு பெயர்ச்சி ஆகி, மீண்டும் வக்கிரகதியாக விருச்சிகத்துக்கு வருவதும் 28.10.2019 இல் குரு பெயர்ச்சியாகி தனுசுக்கு செல்வதும் உங்களுக்கு ஏற்றமான வாழ்வைத் தரும்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் பொருளாதார நிலையில் சில சிரமங்கள் இருந்து வந்தாலும் காலத்துக்குத் தகுந்தபடி பொருளாதார சுழற்சியால் நிலைமையைச் சரி செய்து கொள்வீர்கள். தொழிலில் மந்த நிலையில் விற்பனை நடந்தாலும் சீரான நடைமுறை இருக்கும். வெளிச்சமான வாழ்வை உருவாக்க வேண்டும் என்ற உங்களின் எண்ணம் ஈடேறும். நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு சூரியனின் பலம் சிறப்பாக அமையும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் ஏற்றமான காலமாக அமையும். கிடைத்த தொழில் வாய்ப்பை விடாமல் செய்து நல்ல பலன்களைப் பெறுவீர்கள். இந்தக் காலம் சிலருக்கு யோகமான காலமாக அமையும். பொருளாதாரத்திலும் தொழில் வளம் பெறுவதிலும் சிறப்பான வளர்ச்சியைப் பெறுவீர்கள்.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். தொழிலில் போட்டிகளை எதிர்கொள்ள வேண்டி வரும். எதையும் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். பொதுவாழ்வில் சிலருக்கு ஏற்றமான சூழ்நிலை உருவாகும். பணியில் இருப்பவர்களுக்கு மாற்றம் உண்டாகலாம். எதிர்பாராத திருப்பங்களால் உங்களின் வாழ்வில் சில மாற்றங்களைச் சந்திக்க வேண்டி வரும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திருமணம் வாய்ப்புகள் உருவாகும்.தொழில் தொடங்கவும், வீடு, மனை வாங்கவும் சிலருக்கு வாய்ப்புகள் தேடி வரும். ஒரு சிலருக்கு நல்ல வேலை வாய்ப்பும் அமையும். அரசியலில் முன்னேற்றமான சூழ்நிலையும் எதிர்பாராத பதவியும் கிடைக்கும். சிறந்த கலைஞராக வளர்ந்து வருவீர்கள். பாதுகாப்பு பணியில் இருப்பவர்களுக்கு வெகுமதிகள் கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

பரிகாரம் – வெள்ளி, சனிக்கிழமைகளில் மாரியம்மனை வணங்கி வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் கலந்து தீபமிட்டு வர உங்களின் கோரிக்கை விரைவில் நிறைவேறும்.

## மிதுனம்




தனக்கென்று கொள்கையை வைத்துச் செயற்படும் மிதுனராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களின் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களுடைய இலட்சியத்தை எளிதில் அடைவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் குரு விரைய தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் வீடு, மனை வாங்குதல், முதலீடு செய்தல் போன்ற வாய்ப்புகளைப் பெறுவீர்கள். இந்த ஆண்டு ராகு, கேது பெயர்ச்சியில் ஜென்ம ராசி உங்களின் வாழ்வில் பெரிய வளர்ச்சியைத் தரும். வெளி இடங்களுக்குச் சென்று வருவதும் கடல் கடந்த யோகமும் உண்டாகும். ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் செயல்களில் புதிய உத்வேகம் இருக்கும். தொழிலிலும் உத்தியோகத்திலும் மேன்மையை அடைவீர்கள். உங்களின் பேச்சாற்றலால் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் வளம் பெற்று விளங்குவர். தொழில் நுட்பம், சட்டம் போன்ற கல்வியில் உயர்வு பெறுவீர்கள். தொழிலில் நல்ல பொருளாதார வளர்ச்சியைப் பெறுவீர்கள்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கிடைத்த நல்ல வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வீர்கள். நல்ல நண்பர்களின் தொடர்புகளால் வெற்றியைப் பெறுவீர்கள். திட்டமிட்ட செயற்பாடுகள் ஏற்றம் பெறும். தொழில் செய்து வருபவர்களுக்கு தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் ஏற்படும். கொடுத்த இடத்தில் தடையின்றிப் பணம் வந்து சேரும். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் எதிர்ப்பு மறையும். தொழிலில் உங்களிடம் முரண்டு பிடித்தவர்கள் வெளியேறி விடுவார்கள். இதனால் உங்களின் செல்வாக்கு உயரும். உங்களின் பணியிலும் செயலிலும் திறன்களை வளர்த்து வெற்றி வாய்ப்பைப் பெற்று முன்னேற்றம் காண்பீர்கள். மருத்துவத்துறையில் இருப்பவர்களுக்கு கூடுதல் உயர்வு உண்டாகும். பயணங்களின் போது புதிய நண்பர்களின் தொடர்புகளால் உங்களுக்குப் பயனுள்ள தகவல்கள் கிடைக்கும்.

ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் நீங்கள் நினைத்ததைச் சாதித்துக் காட்டுவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். உங்களின் பிறப்பு குறிப்பில் யோக தசாபுத்தி நடப்பவர்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். திடீர் வளர்ச்சியைப் பெற்று மேன்மையை அடைவீர்கள். தொழிலிலும், பொருளாதாரத்திலும் வளர்ச்சி பெறுவீர்கள். உங்களின் எதிர்கால வாழ்வு சிறப்புடன் அமைய இந்தக் காலம் நன்மையாக அமையும்.

பரிகாரம் – செவ்வாய்க் கிழமைகளில் தெய்வ வழிபாடு செய்து வேப்பெண்ணெய் தீபமிட்டு வர நல்ல பலன் உண்டாகும்.

## இடபம்



மனதுக்கு இதமான செயல்களைச் செய்து வளம் பெறும் இடப ராசியினரே ! இந்த ஆங்கிலப் புத்தாண்டில் உங்களின் வாழ்வு மேன்மை அடையும் . ஆண்டின் தொடக்கத்தில் குரு பார்வை பெற்றுத் திறம்படச் செயற்படும். இதனால் உங்களுக்கு சில கஷ்டங்களைத் தந்தாலும் உங்களின் யோகாதிபதியுடன் இணைந்திருப்பதால் உங்களின் தொழில் வளம், அதிகார பலம், வெளிநாட்டுத் தொடர்புகளால் மேலும் உயர்வான பலன்களைப் பெறுவீர்கள்.ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நீங்கள் எண்ணிய எண்ணம் ஈடேறும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நகைகள் வாங்குதல், புதிய வீடு கட்டுதல், திருமண காரியங்கள் போன்ற நல்ல செயல்களில் ஈடுபடுவீர்கள். புத்திரர்களின் முன்னேற்றம் சிறப்பாக அமையும். நீங்கள் எடுக்கும் எந்த முயற்சியும் நல்ல பலன்களைத் தரும். தொழிலில் உயர்ந்த நிலை அடைவீர்கள். கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நீங்கள் திடமான மனநிலையில் இருந்து காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கும். எதையும் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் போகும். கால தாமதமாகச் செய்து முடிப்பீர்கள். முக்கிய முடிவுகளில் பிறரின் ஆலோசனைகளைப் பெறுவது உங்களுக்கு நல்ல பலனைப் பெற்றுத் தரும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் உங்களின் தொழிலில் நல்ல மாற்றத்தைப் பெறுவீர்கள். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வீர்கள். உங்களின் சிலருக்கு வழக்குகள் இருந்தால் அதிலிருந்து விடுதலை பெறுவீர்கள். தசா புத்திகள் சிறப்பாக அமையப் பெற்றவர்களுக்கு மிகவும் ஏற்றமான காலமாக இருக்கும். பொது விடயங்களில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் எதையும் கவனமுடன் செயற்படுத்த வேண்டும். குடும்பத்தில் சச்சரவுகள் வரலாம். இருந்தாலும் அதனால் உங்களுக்கு பாதிப்புவராது. புதிய தொழில் வாய்ப்பை யோசித்துப் பெறுவது நல்லது. குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதைத் தவிர்த்து நேர் வழியில் முதலீடு செய்வது நன்மையைத் தரும்.

பரிகாரம் – வியாழக்கிழமைகளில் விநாயகருக்கு நீல நிறப்பூ வைத்து, தேங்காய் எண்ணெய் தீபமிட்டு வந்தால் நன்மை பெறுவீர்கள்.

# புத்தாண்டு பலன்கள்-2019

## கடகம்



துணிச்சலான முடிவுகளை எடுத்து நற்பலன் பெறும் கடகராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களின் வாழ்வில் சிறப்பான பலன்களைப் பெற்றுத் தரும். ஆண்டின் தொடக்கத்தில் குரு பார்வை பெறுவது ஜென்ம ராகு பெயர்ச்சியாக விரைய ஸ்தானத்துக்குச் செல்வதும் உங்களுக்கு நற்பலன்களைப் பெற்றுத் தரும். இந்த ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் ஆண்டாக அமையும். தொழிலிலும், அரசியலிலும் சிறந்து விளங்குவீர்கள்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் செல்வாக்கும், நன்மதிப்பும் உயரும். நீங்கள் எதிர்பார்த்த நல்ல பலன்கள் உங்களைத் தேடி வரும். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் பெருகும். நல்ல குணமுள்ள மனைவி அமைவார். மனைவி வழியில் சிலர் அதிர்ஷ்ட பலன்களைப் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். அரசியலில் உயர் பதவிகள் கிடைக்கும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் போட்டிகளைச் சந்திக்க வேண்டி வரும். எதையும் சவாலாக சந்தித்து வெற்றியை நோக்கிப் பயணம் செய்வீர்கள். சிலருக்கு எதிலும் சிரத்தை எடுத்துச் செயற்பட வேண்டிவரும். கருத்துக்களை வெளிப்படுத்தும் போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டி வரும். அரசியலில் புதிய திருப்பங்களைச் சந்திக்க வேண்டி வரும். பாதுகாப்புத் துறையில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் நெருக்கடி இருக்கும். எனினும் உங்களுக்குத் தனிப்பட்ட செல்வாக்கு இருக்கும். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். அரசாங்கப் பொறுப்புகளை அடைவீர்கள். மனதில் தைரியமும் துணிச்சலும் உண்டாகும். முன்னேற்றம் பெறுவீர்கள். பொறுப்புகளை உணர்ந்து திறம்பட செயற்பட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் எதிர்ப்புகள் மறையும். உங்களிடம் அடாவடி செய்தவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். பாதுகாப்புத்துறையில் உத்தியோகத்திலும் இருப்பவருக்குப் பொறுப்புகள் வந்து சேரும். தொழிலில் உழைப்புக்கு முக்கியத்துவம் தர வேண்டி வரும். குடும்பத்தில் சலசலப்பு இருந்தாலும் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. திடமான செயல்களால் உங்களின் வாழ்வில் வளம் பெறுவீர்கள்.

பரிகாரம் – திங்கள் கிழமைகளில் சிவன் மற்றும் அம்மனுக்கு நெய் தீபமிட்டு காரமான உணவு வைத்து வேண்டி வர தீய பலன்கள் மறைந்து நன்மை பெறுவீர்கள்.

## கன்னி



காலம் அறிந்து செயற்படும் கன்னி ராசியினரே ! இந்த ஆண்டு உங்களின் வாழ்வில் உன்னத நிலையை அடைவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் குரு மூன்றாம் இடத்திலும், சனி அர்த்தாஷ்டமத்திலும் அமர்வதால் உங்களின் சுக பலத்தை இழந்தாலும் அடுத்தடுத்து நற்பலன்களைத் தொடர்ந்து அடைந்து வருவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உங்களிடம் நல்லவராக நடந்து கொள்பவர்களை அடையாளம் காண்பீர்கள். தைரிய ஸ்தானாதிபதி பார்வை ராசியில் படுவதால் உங்களின் மன உறுதியும் எதையும் சந்திக்கும் துணிவும் உங்களுக்குப் பக்கபலமாக அமையும். உங்களின் ராசிநாதனும், தொழில் ஸ்தானாதிபதியுமான புதன் தொழில் ஸ்தானத்தை பார்வையிடுவதும் உங்களுக்குப் பக்கபலமாக அமையும். ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் செயலில் இருந்த தடங்கல்கள் மறையும். பலவித சோதனைகளையும் தாண்டி நிலையான பாதையைத் தேர்வு செய்து வளம் பெறுவீர்கள். கவலைகளை மறந்து அன்றாட பணிகளில் கவனம் செலுத்தி நன்மைகளை அடைவீர்கள். உறவுகளால் வந்த சச்சரவு நீங்கும். உங்களின் பணியில் இருந்து வந்த பாதிப்புகள் மறையும். உடல் நலக் குறைவு நீங்கி ஆரோக்கியம் பெறுவீர்கள். தொழிலில் பொருளாதார நிலை மேன்மை அடையும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் புதுப் பொலிவுடன் உங்களின் பணியைத் தொடர்வீர்கள். சகோதரர்களின் உதவி உங்களுக்கு நன்மையைத் தரும். செய்யும் தொழிலில் வளம் பெற்று பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைவீர்கள். எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், ஆராய்ச்சியாளர்களின் முன்னேற்றம் காண்பீர்கள். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் எதையும் மென்மையாகக் கடைபிடிப்பீர்கள். பாசமான சில உறவுகள், பல காலம் ஒதுங்கி இருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். வேலை வாய்ப்புகளுக்கு வழி கிடைக்கும். அரசியல், அரசாங்க பதவிகளில் இடம் பிடித்து உங்களால் முடிந்த அளவு மக்களிடம் ஆதாரவாக இருந்து வருவீர்கள். பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைய உங்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். தொழிலில் வளம் பெறுவீர்கள். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் உங்களின் வீடு, மனை சார்ந்த சகல பிரச்சினைகளும் தீரும். நீண்ட நாள் வீடு கட்டும் எண்ணம் விரைவில் நிறைவேறும். மருத்துவத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் பாராட்டுதல்களையும், வளர்ச்சியையும் பெறுவீர்கள். கிடைத்த எந்த வாய்ப்பையும் விடாமல் வெற்றிக்கு வழி வகுத்து வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

பரிகாரம் – சனிக்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நவக்கிரக சனிக்கும் குருவுக்கும் நெய் தீபமிட்டு இனிப்பு வைத்து தானம் செய்து வர உங்களின் துன்பங்கள் நீங்கும்.

## சிம்மம்



துணிச்சலுடன் செயற்படும் வலிமையுள்ள சிம்ம ராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களின் வாழ்வை வளம் பெறச் செய்யும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் குரு பார்வை பெறுமிடங்கள் சிறப்பாக அமையும். இந்த ஆண்டின் பெப்ரவரியில் ராகு கேது, பெயர்ச்சியாலும் உங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைப் பெறுவீர்கள். கேது பஞ்சம ஸ்தானத்தில் அமர்வதால் குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தொழில் ஸ்தானத்தையும், மறைவு ஸ்தானங்களையும் குரு பார்வையிடுவது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்து விடுவது நல்லது. திட்டமிட்ட செயற்பாடுகளால் சிலருக்கு எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். வேலையில் கடுமை மறைந்து நன்மை பெறுவீர்கள். எதற்கும் துணிந்து செயற்படுவீர்கள். முக்கிய பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பீர்கள். குடும்பத்தில் நற்செய்திகள் வந்து சேரும். தொழிலில் ஏற்றம் பெறுவீர்கள்.ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். உங்களின் வெற்றிச் செய்தியால் நல்ல பலன்கள் கிடைக்கும். எதிர்காலத் திட்டங்களுக்கு அடித்தளம் போடுவீர்கள். பொது விடயங்களில் உங்களின் ஈடுபாடுகள் நல்ல பலனைத் தரும். தேவையான உதவிகளைப் பெற்று நலம் பெறுவீர்கள். அரசியலில் முக்கிய பதவிகள் சிலருக்குக் கிடைக்க வாய்ப்புகள் அமையும். நினைத்தபடி செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் தொழிலில் இருந்து வந்த நெருக்கடிகள் மறையும். கலைஞர்களின் வாழ்வில் வளர்ச்சியைப் பெறுவீர்கள். பொது விடயங்களில் சிறப்பான மாற்றத்தை அடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் உங்களைத் தேடி வரும். ஆபத்தான காலங்களில் நண்பர்களின் ஆதரவு நல்ல பலனைத் தரும். வெளிநாட்டுப் பயணம் பயனுள்ளதாக அமையும். சிறந்த படைப்பாளி மற்றும் புதிய ஆராய்ச்சியாளராகும் வாய்ப்புகள் அமையும்.ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கொடுத்த இடத்தில் உங்களுக்கு சேர வேண்டி கடன்கள் வசூலாகும். தொழிலிலும், உத்தியோகத்திலும், அரசியலிலும் முதல் இடத்தைப் பிடிப்பீர்கள். உறவினர்களின் ஆதரவு உங்களை ஊக்கப்படுத்தும். நினைத்ததைச் சாதித்துக் காட்டுவீர்கள்.

பரிகாரம் – சனிக்கிழமையில் ஆஞ்சநேயர் வழிபாடும், வெள்ளிக்கிழமையில் அம்மன் வழிபாடும் உங்களின் வாழ்வில் உன்னத நிலையை அடைய வழி வகுக்கும்.

## துலாம்



மென்மையான மனம் கொண்டு விளங்கும் துலாம் ராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டில் புத்துணர்ச்சியுடன் செயற்படும் நிலையை அடைவீர்கள்.இந்த ஆண்டின் தொடக்கத்தில் குரு மறைவுஸ்தானங்களை பார்வை படுவதும், சனி தைரிய ஸ்தானத்தில் அமர்ந்து இருப்பதும் சத்துரு ஸ்தானத்தில் செவ்வாய் அமர்ந்து இருப்பதும் உங்களுக்குத் திறம்பட செயற்படவும், எதையும் சந்தித்து வெற்றியைப் பெறும் வாய்ப்பும் அமையும். பின்பு தைரிய ஸ்தானத்தில் குரு இணைந்து சனி பலம் அதிகரிக்கும் போது யோக பலன்களைப் பெறுவீர்கள். அரசியலிலும், அதிகாரத்திலும் உங்களின் பங்கு மிகவும் அவசியமானதாக அமையும்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தொழிலில் லாபத்தைப் பெறுவீர்கள். உணவுப் பண்டங்கள், நவரத்தின நகைகள் விற்பனையில் ஆதாயம் கிடைக்கும். அரசியலில் மக்கள் மத்தியில் செல்வாக்கும், நன்மதிப்பும் உண்டாகும். எதையும் உறுதியுடன் செயற்படுத்தும் உங்களின் போக்கு அனைவரின் அன்பைப் பெற வைக்கும். விளையாட்டு ,பொழுது போக்குகளில் ஆர்வம் கொண்டு விளங்குவீர்கள்.ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கல்வியாளர்கள், படைப்பாளிகளுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். ஒரு செயலில் இறங்கும் முன்பே இதில் சாதக பாதகங்களை ஆராய்ந்து செயலில் இறங்குவீர்கள். ஒரு சிலருக்கு யோக பலன்களும் வந்து சேரும். உங்களை ஏளனம் செய்தவர்களுக்குத் தக்க பாடம் கற்பிப்பீர்கள். சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பிடிக்க காலமெல்லாம் முயற்சி செய்தாலும் இந்தக் காலம் உகந்ததாக அமையும். உங்களின் எண்ணம் நிறைவேறும். அரசியலில் உங்களின் செயல்களால் புதிய மாற்றங்களை உருவாக்குவீர்கள்.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மிதமான செயல்களாக இருக்கும். எதிலும் அவசரம் காட்டமாட்டீர்கள். பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வீர்கள். உறவுகளுடன் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பொதுவான நிகழ்ச்சிகளில் உங்கள் பலத்தை நிரூபிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்வீர்கள். பேச்சுத் திறமை அதிகரிக்கும். பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டு நல்ல பாதையை உருவாக்கி அதில் அவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களின் தன் சுயமுயற்சிகளால் எல்லா வளங்களையும் பெறுவீர்கள். தொழிலில் முக்கிய இடத்தைப் பெறுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும். அந்நியரின் உதவி உங்களுக்குப் பக்கபலமாக அமையும். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வீர்கள். உங்களின் வாழ்வில் மிக பெரிய வெற்றியை அடைவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். நீண்ட நாள் வழக்குகளில் நல்ல முடிவை எட்டுவீர்கள்.

பரிகாரம் – வெள்ளிக்கிழமை மகாலட்சுமி, துர்க்கை அம்மன் வழிபாடு செய்து நெய் தீபமிட்டு வர உங்களின் எண்ணம் போல் வாழ்வு சிறக்கும்.

# புத்தாண்டு பலன்கள்-2019

## விருச்சிகம்



தைரியமும் மன உறுதியும் கொண்ட விருச்சிக ராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களுக்கு எல்லா வகையிலும் நன்மையைப் பெற்றுத் தரும். ஆண்டின் தொடக்கத்தில் குரு ஜென்மத்திலும் ஆண்டிறுதியில் தனஸ்தானத்திலும் அமர்வதும் உங்களின் ஏற்றமான சூழ்நிலையை உறுதி செய்யும். குருவுடன்கேது இணையும் போது அதிர்ஷ்ட பலன்கள் தேடி வரும். பொருளாதாரத்திலும் செய்யும் தொழிலிலும் வெற்றியையும் உயர்வையும் பெற்று முன்னேற்றம் காண்பீர்கள். ஏழரைச் சனி முடிவடையும் போது ஏதாவது நன்மை செய்வார் என்பது உங்களின் காலத்துக்கு உதவியாக அமையும். சூரியனும் சந்திரனும் இருக்குமிடத்தைப் பொறுத்து உங்களின் உயர்ந்த நிலைப்பாடுகள் அமையும்.

ஜனவரி,பெப்பரவரி,மார்ச்மாதங்களில்போராட்டக்குணம்இருக்கும். உங்கள் கண் முன்னே நடக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவீர்கள். சில விடயங்களில் போராடித்தான் ஆக வேண்டுமென்றால் அதையும் செய்து வெற்றியைப் பெறுவீர்கள். திட்டமிட்ட காரியங்களைச் செயற்படுத்த எந்தத் தடைகள் வந்தாலும் அதனைச் சந்தித்து உங்களின் பலத்தை நிரூபிப்பீர்கள். அரசியலில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை உருவானாலும் உங்களின் செல்வாக்குக் குறையாது. முக்கிய முடிவுகளை எடுக்கும் போது பிறரின் ஆலோசனைகளை பெறுவது உங்களுக்குப் பக்கபலமாக அமையும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் தன ஸ்தானம் பலம் பெறுவதால் எதிர்பாராத திருப்பங்களும், உங்களின் வாழ்வில் இதுவரை சந்திக்காத பல உன்னத நிலையையும் அடைவீர்கள். சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் கிடைக்கும். விளையாட்டுத் துறையில் வளர்ச்சியைப் பெற்று முன்னேறுவீர்கள். பொது விடயங்களில் ஆற்றலைர் பெற்று மக்கள் மத்தியில் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உங்களின் பேச்சில் நிறைவான மன உறுதியை அடைவீர்கள். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் நிச்சயமான காரியங்களில் நல்ல பலனைப் பெறுவீர்கள். திருமணத்துக்கு நல்ல வரன் அமையும். திருமணம் செய்தவர்கள் மனைவி மூலம் வளம் பெறுவீர்கள். சிலருக்கு வேலை வாய்ப்பும் அரசாங்கப் பதவியும் கிடைக்கும். சில வழிகளில் உங்களின் தொழில் மேன்மை பெறும். பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு உதவி செய்து அவர்களின் வாழ்வில் உதவுவீர்கள்.

ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் உங்களின் வளர்ச்சி இன்னும் பலமானதாக அமையும். மருத்துவம், காவல், விளையாட்டுத்துறையில் இருப்பவர்களுக்கு ஏற்றமான சூழ்நிலை உருவாகும். உங்களின் சுய குறிப்பில் யோக தசாபுத்தி நடந்தால் உலக அளவில் பெயர் பெற்று விளங்குவீர்கள். அடிக்கடி அதிர்ஷ்ட பலன்கள் உண்டாகும். மனதில் நினைத்ததை நடைமுறையில் செயற்படுத்துவீர்கள். தொழிற்சங்கப் பொறுப்புகளில் சிறந்து விளங்குவீர்கள். பொருளாதாரத்தில் பலவழிகளில் நன்மை பெறுவீர்கள்.

பரிகாரம் – சனி, ஞாயிறுகளில் ராகு காலத்தில் பைரவருக்கு நல்லெண்ணெய் தீபமிட்டு உளுந்து வடை வைத்து வேண்டி வர தொழிலிலும் உத்தியோகத்தில் நன்மை பெறுவீர்கள்.

## தனுசு



தன் பலத்தை தானே சோதித்துக் கொள்ளும் தனுசு ராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களின் நிலையை மாற்றி அமைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் ராசிநாதன் குரு விரையத்தில் அமர்ந்தும், ஜென்ம சனியாகவும் ஏழரைச் சனியாகவும் ராசியில் அமர்ந்து இருப்பது உங்களின் சுயமான செல்வாக்குக்குப் பாதகங்களைத் தந்தாலும் ராசிநாதன் எங்கிருந்தாலும் உங்களின் ராசிக்கு நன்மையைச் செய்வார். குரு முழுப் பலம் பெற்ற ராசி என்பதால் ஆதிக்கம் செலுத்தும் உங்களின் போக்கு அதிகார பலம் பெற்றதாக அமையும். உங்களின் ராசிக்கு யோகாதிபதியே ராசியில் அமர்ந்து இருப்பது உங்களுக்கு மேலும் நல்ல பலன்களைப் பெற்றுத் தரும். தந்தை வழியில் ஆதரவும் தந்தை வழிச் சொத்து மூலம் உயர்நிலை அடையும் வாய்ப்பு அமையும்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இடமாற்றம் , தொழில் மாற்றம், பொருள் மாற்றம் நிகழ வாய்ப்பு அமையும். குடும்பத்தில் பெண்களுக்குத் திருமண வாய்ப்பு அமையும். உங்களின் சுய தசாபுத்தி பலம் பெற்று இருந்தால் கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் பொருளாதாரத்திலும் தொழிலிலும் வளர்ச்சியைப் பெறுவீர்கள். உங்களின் ஸ்தானாதிபதியே ராசியில் அமர்ந்து தொழிலில் மேன்மை அடையச் செய்வார். புதிய முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். எதையும் முன்கூட்டியே யோசித்துச் செயற்படுவது உங்களின் பலமாக அமையும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் குரு பெயர்ச்சி தற்காலிகமாக ராசிக்கு வருவதும், ராகு கேது பெயர்ச்சியாக இணைவதும் உங்களின் எதிர்பாராத பலத்தை உறுதி செய்யும். செய்யும் தொழிலிலும் உத்தியோகத்திலும் பொறுப்புகள் அதிகரித்து உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக அமையும். உடல்நலனில் இருந்து வந்த துன்பங்கள் நீங்கி ஆரோக்கியம் பெறுவீர்கள். உறவுகளை இணைத்து வெற்றியைப் பெறுவீர்கள். உங்களின் சுய செல்வாக்கு உயரும். அரசியலிலும், தொழிற்சங்கத்திலும் முக்கிய பொறுப்புகள் வந்து உங்களை ஊக்கப்படுத்தும். ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மருத்துவத்துறையினரும், அதிகார பதவியில் இருப்பவர்களும் ஆசிரியர்களும் முன்னேற்றம் பெறுவீர்கள். பொதுவான விடயங்களில் ஈடுபாடு கொண்டு உங்களின் நேர்மையை உறுதி செய்து கொள்வீர்கள். உங்களின் கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயலில் ஈடுபட்டால் எல்லாம் சிறப்பாக அமையும். தொழில் அதிபர்களின் கூட்டுத் தொழிலில் வளர்ச்சியைப் பெறுவீர்கள். அந்நிய முதலீடுகளில் ஆதாயம் பெறுவீர்கள். ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் உங்களின் மன உறுதி பலமாக அமையும். உங்கள் குறிப்பில் தசாபுத்தி பலம் பெற்று இருப்பவர்களுக்கு உன்னதமான பதவிகளைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு உயரும். உயர்பதவி சிலருக்குக் கிடைக்க வாய்ப்பு அமையும். சனி கொடுத்தால் யார் தடுப்பார் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது நல்லது.

பரிகாரம் – வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் வேலுக்கு பால் அபிசேகம் செய்து விளக்கெண்ணெய் தீபமிட்டு வர நினைத்த காரியம் கைகூடும். தொழிலில் வளம் பெறுவீர்கள்.

## கும்பம்



வலிமையான மன உறுதி கொண்டு விளங்கும் கும்ப ராசியினரே ! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களுக்கு சாதகமான பலன்களைப் பெற்றுத் தரும். விரைய கேது இனி லாப ஸ்தானத்தில் அமர்வதும் குருவுடன் இணையும் காலமும் உங்களுக்கு யோக பலன்களைப் பெற்றுத் தரும். ராசிநாதனுடன் கேது இணைவது நல்லதல்ல என்றாலும் குரு இணையும் போது கேதுவின் பலம் அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அமையும். குருவால் செவ்வாய் பலம் பெறுவதால் மிகப் பெரிய நல்ல வாய்ப்பைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் முக்கிய பொறுப்புகளில் கவனம் செலுத்த வேண்டி வரும். ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் ராசிக்கு ராசிநாதன் லாப ஸ்தானத்தில் அமர்வதுடன் கேது இணைவது எதிலும் போட்டி மனப்பான்மையையும் செய்த வேலையைத் திரும்பச் செய்ய வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கும். கிடைத்த வாய்ப்பு சிலருக்கு சிறுபாதிப்பையும் தராது. உங்களின் ராசிநாதன் உங்களுக்கு கெடுபலன் வருவதை விரும்ப மாட்டார். நினைத்தபடி செயலில் இறங்குவீர்கள். பொது விடயங்களில் கவனமுடன் செயற்படுவீர்கள். யாருக்கும் தீங்கு செய்ய நினைக்க மாட்டீர்கள். தொழிலில் மந்த நிலை இருந்தாலும் பொருளாதாரத்தில் சகஜமான சூழ்நிலை உருவாகும்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உங்களின் ராசிக்கு குரு பலம் பெறுவதாலும் ராசிநாதனுடன் இணைவதாலும் கேதுவால் வரும் கெடு பலன்கள் மறையும். குறிப்பில் யோக தசாபுத்தி நடப்பவர்களுக்கு திடீர் அதிர்ஷ்ட பலன்கள் உண்டாகும். நினைத்த காரியம் கைகூடும். சிலருக்குத் திருமண வாய்ப்புகள் அமையும். கொடுத்த இடத்தில் பணம் வந்து சேரும். தொழிலில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். பரிசுப் பொருட்களைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல காலம் அமையும். பசியோடு இருப்பவருக்கு உணவு அளித்து வர உங்களின் வாழ்வில் கிடைக்க கூடிய பலன்கள் பல மடங்கு அதிகரிக்கும். சகோதரர்களின் உதவி நன்மை தரும். முதலீடுகளில் கவனம் செலுத்துவது நல்லது. ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் உங்களிடம் அண்டி இருந்தவர்கள் உங்களுக்கு எதிராகச் சில காரியங்களைச் செய்து உங்களிடமிருந்து பிரிந்து செல்வார்கள். கிடைக்க வேண்டிய பலன்கள் தாமதமானாலும் உங்களுக்கு விரைவில் கிடைக்கும். ஆன்மீக சேவை செய்து வருபவர்கள் கவனமுடன் செயற்படுவது நல்லது. தொழில் போட்டிகளில் உங்களின் செயற்பாடுகளால் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகளைச் சவாலாகச் சந்தித்து உங்களை மேன்மைப் படுத்திக்கொள்வீர்கள். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் நீங்கள் எண்ணிய எண்ணம் ஈடேறும். சமயத்துக்கு தகுந்தபடி உங்களின் போக்கை மாற்றிக் கொண்டு சாதகமாகச் செயற்படுவீர்கள். அரசியலிலும், உத்தியோகத்திலும் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பும் அமையும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். வெளிநாட்டுப் பயணம் பயனுள்ளதாக அமையும்.

பரிகாரம் – வெள்ளிக்கிழமைகளில் வெண் கடுகு எடுத்து வாசலில் போட்டுதீயிட்டு வர கண் திருஷ்டி மறையும்.

## மகரம்



சொல்லிலும், செயலிலும் வல்லமை பெற்ற மகர ராசியினரே! இந்த ஆங்கிலப் புத்தாண்டு உங்களின் வாழ்வில் மாற்றங்களை உருவாக்கித் தரும். உங்களின் ராசிநாதன் விரையத்தில் அமர்வதும் செவ்வாய் தைரிய ஸ்தானத்தில் அமர்வதும் உங்களின் வாழ்வில் அடைய வேண்டிய பாக்கியத்தை அடையச் செய்யும் உங்களின் சுய செல்வாக்கு உயரும். மக்கள் மத்தியில் உங்களின் மதிப்பு ஏற்றம் பெறும். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வீர்கள். வாகன யோகங்களும், பதவி உயர்வும் பெற நல்ல காலமாக அமையும். தொழிலில் நினைத்த இலக்கை அடைவீர்கள்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் ராசிக்கு குரு லாப ஸ்தானத்திலும், ராசிநாதன் விரையத்திலும் அமர்ந்திருப்பது சுப விரையமாக திருமணம், வீடு கட்டுதல் காணி நிலம் வாங்குதல் போன்ற யோகங்கள் கிடைக்கும். எதைச்செய்தாலும் அதில் எல்லோரும் பயன்படும்படி செயற்படுவீர்கள். காலத்துக்கு தகுந்தபடி தொழிலில் மாற்றத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். இரும்பு சம்பந்தமான தொழிலிலும், வாகன விற்பனை தொழிலிலும் வளம் பெறுவீர்கள். கணவன் மனைவி உறவில் இருந்த விரிசல் மறையும். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும். படித்த படிப்புக்கு சம்மந்தமில்லாத வேலை பார்ப்பீர்கள்.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உங்களின் குறிப்பு அமைப்பில் யோகமான தசா புத்தி நடப்பவர்கள் அரசியலில் வளம் பெறுவீர்கள். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எந்த மாற்றத்தையும் ஏற்றுக் கொண்டு செயற்படுவீர்கள். குணம் அறிந்து செயற்படுவீர்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைச் செய்வீர்கள். பொது வாழ்வில் அதிகமான ஆர்வம் கொண்டு விளங்குவீர்கள். தொழிலில் போட்டியின்றி இருக்க நினைப்பீர்கள். மாணவர்களின் கல்வி ஏற்றம் பெறும். விவசாயப் பொருட்களுக்கு விலை ஏற்றம் உண்டாகும்.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எல்லா வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். உங்களின் நண்பர்களின் உதவியும், தொழிலாளர்களின் உதவியும் உங்களுக்கு பக்கபலமாக அமையும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை சிலருக்கு சாதகமாக அமையும். மலைபோல் பிரச்சினை வந்தாலும் உங்களின் செயலால் பனி போல் மறைந்து நன்மை கிட்டும். கொடுக்கல் வாங்கலில் சிலருக்கு சிரமமான சூழ்நிலை இருந்து வந்தாலும் சமயோசிதமாக அதைச் சரி செய்துவிடுவீர்கள்.

ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் ஜென்ம கேது மறைவதால் , உங்களின் ராசி குரு, கேதுவுடன் இணைவு பெறுவதும் உங்களின் நிலையை மாற்றி அமைக்கும். கடந்த கால கசப்பான அனுபவங்கள் உங்களை மாற்றி செல்வாக்கும், பொருளாதார நன்மையும் பெறச் செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகும்.

பரிகாரம் – செவ்வாய்க்கிழமைகளில் முருகனுக்கு தீபமிட்டு துவரைச் சாதம் செய்து வணங்கி வர தொழிலில் விருத்தியையம் உயர்நிலையையும் பெறுவீர்கள்.

## மீனம்



எளிமையாக இருக்க விரும்பும் மீன ராசியினரே ! இந்த ஆண்டு உங்களின் ராசிக்கு ராசிநாதன் குரு ராசியை பார்ப்பதும் லாபாதிபதி சனி தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து விரையத்தை பார்ப்பதும் உங்களின் தொழிலில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். அடுத்த நிலையை அடைய உங்களுக்கு சாதகமான சூழ்நிலை உருவாகும். ஆண்டு பிறக்கும் போது தொழில் ஸ்தானத்தில் சூரியன் திக்பலம் பெறுவது அரசாங்க காரியங்களில் முன்னேற்றமான சூழ்நிலையை உருவாகும். சுற்றுலா, பத்திரிக்கை, ஊடகம் சம்மந்தமான தொழில்களைச் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகளும், புதிய அனுபவங்களையும் பெறச் செய்யும். வளமான எதிர்கால சூழ்நிலை உருவாகும். அரசியலில் சிலருக்கு வாய்ப்பு அமையும்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்களின் ராசிக்கு குரு சாதகமான சூழ்நிலையில் இருப்பதால் உங்களின் தொழிலிலும், செல்வாக்குகளிலும் பலம் பெற்று விளங்குவீர்கள். மனதில் நினைத்ததை செயலில் காட்டுவீர்கள். இரக்க குணம் கொண்ட உங்களுக்கு ஆதரவாக எல்லோரும் இருப்பார்கள். சகோதர ஒற்றுமை, பூர்வீகச் சொத்து சார்ந்த பிரச்சினைகளில் தீர்வு, பழைய வழக்குகளிலிருந்து விடுபடுதல் போன்றவற்றால் நன்மை பெறுவீர்கள். குழந்தைப் பாக்கியம் சிலருக்கு உண்டு. திருமண காரியம் இனிதே நடக்கும்.ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உங்களின் ராசியில் சூரியன் அமரும் காலம் என்பதால் நல்ல பலனைத் தரும். சனியுடன் கேது இணைவதால் குரு பலம் பெற்று உங்களின் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழில் சார்ந்த உங்களின் நீண்ட நாள் கோரிக்கை இந்தக் காலத்தில் நடக்கும். வெளிநாட்டுப் பயணம் பயனுள்ளதாக அமையும் குடும்ப ஒற்றுமைக்கு வழி வகுக்கும். யாரையும் நம்பாமல் செயலில் இறங்கி உங்களின் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். மதம் சார்ந்த ஒற்றுமைக்கு உறுதுணையாக நின்று செயற்படுவீர்கள். காலத்தின் நிலை கருதி உங்களின் போக்குகளை மாற்றிக் கொள்வீர்கள்.

ஜூலை, ஓகஸ்ட், செப்டரெம்பர் மாதங்களில் உங்களின் நிலையில் மாற்றம் தெரியும். தொழில் சார்ந்த வெளியூர்ப் பயணம் சிறப்பாக அமையும். உங்களுக்கு சாதகமாக சூழ்நிலைகள் உருவாகும். தொழிலில் நீங்கள் நினைத்த மாற்றங்களைச் செய்வீர்கள். பொதுநல செயல்களில் ஈடுபடுவீர்கள். உறவுகளில் இருந்து வந்த விரிசல் மறையும். மனதில் தெளிவான முடிவுகளை எடுத்து நல்ல பலன்களைப் பெறுவீர்கள். கலைஞர்களின் வாழ்வில் நல்ல மாற்றம் உண்டாகும். புதிய ஒப்பந்தங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். மாணவர்களின் உயர்கல்விக்கு உதவிகள் கிடைக்கும். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் உங்களின் நிலைபாடுகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டு செயற்படுவீர்கள். பொன் ,பொருள் சேர்க்கை, திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு என்பன பொருளாதாரத்தில் மேன்மையை ஏற்படுத்தும் தொழிலில் வெற்றி, கேளிக்கை, சுற்றுலா, பத்திரிகை என்பன வளர்ச்சி பெற்று மேன்மேலும் ஏற்றம் பெறுவீர்கள். அரசியலில் சிறு வளர்ச்சியைப் பெறுவீர்கள். கடந்த காலத்தை காட்டிலும் முன்னேற்றம் பெறுவீர்கள்.

பரிகாரம் – அம்மனுக்கு வெள்ளிக்கிழமை விளக்குப் போட்டு வர நல்ல பலன் கைகூடி வரும்.

**first national** REAL ESTATE | Hall & Partners

## *Interested in knowing what your property is worth?*



**Property value and house prices change with the market. Call me direct to get a view of your current property value.**

**I will happily appraise your property, giving you you an up to date market analysis free of charge with no obligation to sell.**

# SP Shagi - 0413 076 585

## OUR SALES TEAM WITH THE MOST LOCAL EXPERIENCE

*"Let our experience work for you"*



**Michael Hall**
Managing Director



**Adrian Hall**
Director



**Leigh Hall**
Director



**Tim Retallack**
Licensed Estate Agent



**Walter Kubiak**
Licensed Estate Agent



**Chen Liu**
Licensed Estate Agent



**Irene Athanasiadis**
Property Consultant



**Yasantha De Silva**
Licensed Estate Agent



**Jane Li**
Property Consultant



**Omid Mahramzadeh**
Property Consultant



**Michael Cervenjak**
Licensed Estate Agent



**Gavin Andrews**
Licensed Estate Agent



**Nuwan Ranasingha**
Property Consultant



**Violet Ross**
Property Consultant


Transco CARGO
DID YOU KNOW YOU CAN
EXPORT YOUR CAR TO SRI LANKA
CALL TRANSCO TODAY! don't miss out.
LIVING OR WORKING IN AUSTRALIA? HOLD DUAL CITIZENSHIP OR SRI LANKAN PASSPORT?
IF THE ANSWER IS "YES" YOU COULD BE ELIGIBLE TO SEND A VEHICLE TO SRI LANKA ON A NO FOREIGN EXCHANGE PERMIT.* YOU ARE ELIGIBLE TO IMPORT A VEHICLE UP TO 3 YEARS OLD IN TO SRI LANKA WITHOUT OPENING A LETTER OF CREDIT.
* Conditions Apply. You will have to pay prevailing duty to the Sri Lankan government. This legislation could be amended or cancelled by the governing authorities without prior notice.
POPULAR MAKES AND MODELS
BENZ C200 | BMW 318I | BMW X1 | BMW X2 | AUDI A1 | AUDI A3 | AUDI Q3 | HONDA CRV
TOYOTA CHR KOBA | MITSUBISHI ECLIPSE | MG ZS | VW POLO | VW TIGUAN
follow us on
We love to deliver
45 Adrian Rd, Campbellfield (03) 9357 7228
206-208 Discovery Road, Dandenong South (03) 9703 2255 NEW
2/16-17 Hammer Court, Hoppers Crossing (03) 97905588
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707
CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU